# அரசு ஊழியர்

செப்டம்பர் 2020

மலர் : 41 இதழ் : 9

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### வெடிக்காத எரிமலைகள்!


*கங்கைக்கு கரையிருக்கு*
*கண்ணீருக்கு கரையிருக்கா...?*
*நாளைக்கு நிச்சயமாய்*
*உலை கொதிக்க வழியிருக்கா...?*

*வீதிகளே வீடுகளாய்...*
*வெயில் ஒளியே வெள்ளுடையாய்...*
*ஏழை இந்தியா இடிப்பொடிஞ்சு கிடக்கு!*

*நொடிதோறும் நோய்நொடியில்...*
*அடிமாட்டு மனநிலையில்...*
*தேம்பியழத் தெம்பின்றி...*
*விம்மியழத் துணிவின்றி...*
*வெடிக்காத எரிமலையாய் என் தேசம்!*

*கோடித் துணி கிடைக்கும் நிச்சயமா!*
*போடத் துணி கிடைக்குமா நிச்சயமா?*

**- நவகவி**



தலைவர் மடல்

## மக்களை திசைமாற்றப் பார்க்கும் திட்டமிடப்பட்ட எதிர் போராட்டங்கள்!

படிப்பது இராமாயணம்
இடிப்பது பாபர்மசூதி

என்கிற புதுக்கவிதைக்கு ஏற்ப மத்தியில் ஆளும் மோடி அரசு இந்திய மக்கள் நலன்களுக்கு எதிரான காரியங்களை செய்து கொண்டு அதை எதிர்த்து போராடினால், மக்களுக்கு எதிர்நின்று காவிப் போராட்டம் நடத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் நீட் தேர்வு, ரஃபேல் ஊழல், இந்தித் திணிப்பு, விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, புதிய மீன்பிடிக் கொள்கை, ஓபிசி இட ஒதுக்கீடு பறிப்பு, கீழடி ஆய்வு முடக்கம், பணமதிப்பிழப்பு தோல்வி, ஜிஎஸ்டி வரிவிதிப்பு, தூத்துக்குடி படுகொலைகள், பெட்ரோல் டீசல் விலை உயர்வு, கேஸ் சிலிண்டர் விலை உயர்வு, 5 மற்றும் 8ஆம் வகுப்பு பொதுத் தேர்வு, எட்டு வழிச்சாலைக்கு புதிய வடிவம், காவிரி மேலாண்மை உரிமை பறிப்பு, 2020 புதிய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, தமிழக பணியில் வட இந்தியர் நியமனம், புதிய கல்விக் கொள்கை என்ற குலக்கல்வி முறை, டெல்டா பகுதி கார்ப்பரேட்டுகளுக்குத் தானம் என அனைத்து வகையான மக்கள் நலன்களுக்கு எதிரான செயல்களிலும் மத்திய பாஜக அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழக மக்கள் சுயமாக தெளிவாக சிந்தித்து தங்கள் அடிப்படை உரிமைகளான கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சுகாதாரம் போன்றவற்றுக்காக போராடினால் போராடும் மக்களை திசை திருப்பவும் அவர்களின் கவனத்தை சென்டிமெண்டலான வழியில் திசை திருப்பவும் பாஜகவினர் வேறுவகையான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். நடிகர் விஜய்படம், வைரமுத்துவின் கருத்து, நெல்லை கண்ணன் பேச்சு, சுகிசிவம் கருத்து, நடிகர்கள் சிவக்குமார், விஜய்சேதுபதி, நடிகை ஜோதிகா

ஆகியோரின் கருத்துக்கள் இந்துக்களின் மனதை புண்படுத்துவதாக, பாஜகவினர் போராட்டங்கள் நடத்துகின்றனர். இதுபோதாதென்று திருவள்ளுவர், எம்ஜிஆர் மற்றும் பெரியார் சிலைகளுக்கு காவிஉடை அணிவித்து சர்ச்சை, பெரியார் மற்றும் அம்பேத்கர் சிலைகளை சேதப்படுத்தி பதட்டம் என்று விதவிதமான போராட்டங்கள் நடத்தி 7 கோடி தமிழ் மக்களையும் திசை திருப்பி மக்களின் அன்றாடப் பிரச்னைகளை நீர்த்துப் போகச் செய்து தமிழகத்தை கார்ப்பரேட்டுகளுக்கு விற்றுவிடப் பார்க்கிறது ஆளும் பிஜேபி அரசு.

கொரோனா வைரஸ் தொற்றுக்காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்நிய மூலதனத்திற்கும் பெரும் கார்ப்பரேட்டு களுக்கும் மிகப்பெரிய அளவில் சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறது மத்திய அரசு. பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியாரிடம் தாரை வார்த்திட நடவடிக்கைகள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. புதிதாக கொண்டுவரப்படும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு வரைவு இதுநாள் வரையிலும் இருந்துவரும், முறைப்படுத்தும் நெறிமுறை களை நீர்த்துப்போகச்செய்து, வனங் களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் மிகப்பெரிய அளவில் ஊறுவிளைவிக்கும் விதத்தில் நம் நாட்டின் இயற்கை வளங்களை அந்நிய மற்றும் உள்நாட்டு கார்ப்பரேட்டுகள் சூறை யாடுவதற்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

பிரதமர் மோடியின் சுதந்திர தின உரை சமூகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அறிந்திருப்பதாக ஏதும் காட்டிக்கொள்ள வில்லை. பொருளாதார ரீதியாக பின்தங்கி யுள்ள சமூகத்தில் உள்ள குழந்தைகள் தங்கள் கல்விக்கான எதிர்காலம் என்ன ஆகுமோ என்று தெரியாது அவதிப்படுவது குறித்தோ அவர்களில் பலர் பாதியில் படிப்பை கைவிடும் நிலை ஏற்பட்டிருப்பது குறித்தோ அது கவலைப்படவில்லை.

கொரோனா வைரஸ் தொற்று நம் நாட்டை பீடிப்பதற்கு முன்பாகவே நாட்டின் பொருளாதாரம் மந்த நிலைக்கு சென்று கொண்டிருந்தது. ஆழமான பொருளாதார மந்தத்தின் விளைவு... மிகப்பெரிய அளவில் வேலை இழப்புகள், சிறு வர்த்தக நிறுவனங்கள் மூடல், சேவைத்துறையில் கணிசமான இழப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

தேவை மற்றும் நுகர்வில் ஏற்பட்டிருக்கிற சரிவு பொருளாதார நெருக்கடியை மேலும் ஆழமாக்கி இருக்கிறது, வருமானத்தில் இழப்பு, மக்களின் சேமிப்புகளில் அரிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. வேலையிழந்துள்ள லட்சக்கணக்கான மக்களைப் பற்றியோ, தங்களுடைய வருமானங்களை கடுமையாக இழந்து தவித்துக் கொண்டிருக்கும் மக்களைப் பற்றியோ அல்லது வாழ்வாதாரங்களை இழந்த மக்களைப் பற்றியோ பாரதப் பிரதமர் மோடி தன்னுடைய சுதந்திர தின அறிக்கையில் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இந்த நிலையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு கடவுளையும் கொரோனாவையும் காரணம் காட்டியிருக் கிறார். ஏதோ பொருளாதா வீழ்ச்சி கொரோனா வுக்கு பின் ஏற்பட்டது போலவும் அதற்குமுன் வலிமையான நிலையில் இருந்தது போலவும் பாசாங்கு செய்திருக்கிறார். ஏற்கனவே அதல பாதாளத்தில் (3) வீழ்ந்துபோன இந்திய பொரு ளாதாரம் இப்போது எங்கே (-23) இருக்கிறது என்று தேட வைத்திருக்கிறது பாஜக அரசு.

இன்சூரன்ஸ் துறையில் தனியாரை பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிக்கும் போது அது சாமானிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்கள். ஆனால் நடப்பது என்ன? எந்த மாநிலத்தை இந்திய ஆட்சியாளர்கள் “மாடல் மாநிலம்'' என்று சொன்னார்களோ அந்த குஜராத் மாநிலமே இப்போது பிரதமரின் பயிர்க்காப்பீட்டு திட்டத்திலிருந்து வெளியேறுகிறது. காரணம் பிரிமியம் சுமை தாங்க முடியவில்லையாம்.

ஏற்கெனவே பீகாரும் மேற்கு வங்காளமும் இத்திட்டத்திலிருந்து வெளியேறி விட்டன. பஞ்சாப் இந்தத் திட்டத்திற்குள் வரவேயில்லை. ஆரம்ப காலத்தில் விவசாயிகள் வெளியேறிய செய்திகள் வந்தன இப்போது மாநிலங்களே வெளியேறுகின்றன. லாபம் வந்தால் அரசு நிறுவனம் விலகி நிற்க வேண்டும். லாபம் வராது என்றால் தனியார் நிறுவனங்கள் பயிர் காப்பீட்டிலிருந்து வெளியேறிவிடும்

என்பதற்கு ஏற்கெனவே உதாரணங்கள் உள்ளன. இது இந்தியா தனியார்மயமாவதால் என்ன நடக்கும் என்பதற்கு ஒரு உதாரணம்தான்.

தற்போது மத்திய அரசு கொண்டுவந்துள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை 2020ன்படி தொழிற்சாலை தொடங்குவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டியதில்லை. தொழிற்சாலைகளை துவக்கிய பிறகு அனுமதிக்காக விண்ணப் பிக்கலாம் என்கிறது வரைவு.

கடந்த மே மாதம் விசாகப்பட்டினத்தில் பாலிமர் தொழிற்சாலையில் விஷவாயு விபத்து நடந்த பிறகுதான் அத்தொழிற்சாலை சுற்றுச் சூழல் அனுமதி பெறாமலேயே தொடங்கப் பட்டு இயங்கி வந்தது தெரிய வந்தது. இத்தகைய சூழலில் தற்போதைய சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை அதை சட்டரீதியாக அனுமதிக்க வழி செய்கிறது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானதாகும்.

தமிழகத்தில் ஏற்கெனவே ஓஎன்ஜிசி, வேதாந்தா நிறுவனங்களுக்கு எண்ணெய் ஆய்வுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியை வைத்து 34 கி.மீ. ஆழத்துக்கு குழி வெட்டலாம், பக்கவாட்டில் போர்போடலாம். காவிரிப்படுகையில் இப்படி 100 கிணறுகள் போட்டால் போதும் அங்கே இருக்கும் நீர் ஆதாரம் முழுக்க வெளியே வந்துவிடும். கடல் தண்ணீர் உள்ளே புகும். உப்பு கலக்கும்.

சுதந்திர தின விழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி இந்திய சுகாதாரத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில் தேசிய டிஜிட்டல் சுகாதாரத்திட்டம் துவக்கப்படும் என்றும் அனைவருக்கும் தனித்தனி மருத்துவ அட்டை வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார். ஏற்கெனவே ஆதார் அட்டையை அறிமுகப்படுத்திய போதும் இதுஒரு மிகப்பெரிய புரட்சி என்றுதான் வாய்ப்பந்தல் போட்டார்கள். ஆனால் நடைமுறையில் பல்வேறு குளறுபடி களை அந்தத் திட்டம் உருவாக்கியது மட்டுமல்ல, குடி மக்களுக்கு அதனால் பெருமளவு பலன் எதுவும் இல்லை என்பதே நமது அனுபவமாகும்.

இன்னமும் கூட இந்தியாவில் மருத்துவ வசதி பெறாத கிராமங்கள் உள்ளன. அதற்கு முன்னுரிமை தராமல் இன்னும் சொல்லப் போனால் ஒட்டுமொத்த சுகாதாரத்துறையையும் தனியாருக்குத் தர அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் நிலையில் ஆளுக்கொரு மருத்துவ அட்டையை வைத்துக்கொண்டு என்ன செய்வது? பொது சுகாதாரத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் மூன்று சதவீதமாவது ஒதுக்கிட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதை நிறைவேற்றத் தயாராக இல்லாத மத்திய அரசு மேலும் ஒரு அட்டையை அறிமுகப்படுத்து வதையே தன்னுடைய சாதனையாகக் கருதுகிறது.

சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதன் ஒரு பகுதியாகவே புதிய கல்விக்கொள்கை கொண்டு வரப்படுகிறது என்றும் பிரதமர் கூறியுள்ளார். இந்தியாவின் கூட்டாட்சித் தன்மைக்கு எதிராக மொழித் திணிப்பையும், கல்வித்துறையை கொஞ்சம் கொஞ்சமாக தனியாரிடம் தருவதை நோக்கமாகக் கொண் டும், கல்வித்துறையை மதவெறிமயமாக்கு வதை இலக்காகக் கொண்டும் உருவாக்கப் பட்டுள்ள புதிய கல்விக்கொள்கை சுயசார்பு இந்தியாவை உருவாக்கப் பயன்படாது. மாறாக அறிவு வளர்ச்சியை பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளும் என்பதே உண்மை.

ஆண்டாளை வைத்து, வள்ளுவருக்கு காவி பூசி, அம்பேத்கர் சிலையை உடைத்து, பெரியார் சிலைக்கு காவி பூசி, எம்ஜிஆர் சிலைக்கு காவித்துண்டு போர்த்தி அவர்கள் மதம் கொண்டு போராட்டம் நடத்தட்டும். சுற்றுச் சூழல் சட்டம் 2020, புதிய கல்விக்கொள்கை, மக்கள் தொகை பதிவேடு, எட்டுவழிச்சாலை, ஹைட்ரோகார்பன் திட்டம், நீட், தனியார்மயம், ஸ்டெர்லைட், அணுஉலை போன்றவற்றிக்கு எதிராகவும் பிற்படுத்தப் பட்டோர் இடஒதுக்கீட்டு உரிமை போன்ற மக்கள் நலன்களுக்காக அரசு ஊழியர்களாகிய நாம் மனம்கொண்டு போராடுவோம். மக்களுக்காக போராடுபவர்களுடன் இணைந்து நிற்போம். ■

## தேசம் காக்க

# களம் அமைத்து போராடுவோம்!

**கொ**ரோனா உலக பொருளாதாரத்தை புரட்டி போட்டிருக்கிறது. கொரோனா தொற்றில் உலகிலுள்ள நாடுகளில் முதலிடம் அமெரிக்கா, இரண்டாவது இடம் பிரேசில், மூன்றாவது இடம் இந்தியா. இந்த கொரோனா நோயின் காரணமாக ஒவ்வொரு தனிநபரின் வருமானம் பத்து ஆண்டுகளுக்கு பின்னோக்கி சென்றிருக்கிறது. பெரும்பாலானோர் பூஜ்ஜியத்திலிருந்து மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்க வேண்டும். இந்த அனைத்து நெருக்கடிகளிலிருந்து பொருளாதாரத்தையும் மக்களையும் மீட்க மத்திய அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது?

மத்திய பிஜேபி அரசு சுயசார்பு இந்தியாவை உருவாக்க கொரோனா ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கி கொடுத்திருப்பதாக பிரதமர் மோடி அவர்கள் கூறினார். கொரோனா நிவாரணப் பணிகளுக்காக ரூ. 20 லட்சம் கோடி ஒதுக்கி இருப்பதாக கூறிய அவர் ஆற்றிய உரையில், சுயசார்பு இந்தியாவை உருவாக்க வேண்டும் என்றார். ஆனால் அந்த தொகை என்னென்ன துறைகளுக்கு ஒதுக்கப்படும் என்று விளக்கம் அளித்த நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், அதில் பெருந்தொகை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கே பங்கு வைத்தார்.

அது மட்டுமின்றி ரயில்வே, இன்சூரன்ஸ், வங்கி உட்பட அனைத்துத் துறைகளிலும் தனியார்மயத்தை தீவிரப்படுத்தப் போவதாக அறிவித்தார். பொதுத்துறை நிறுவனங்களை அழித்துவிட்டு சுய சார்பை எவ்வாறு உருவாக்கப் போகிறார்கள் என்ற கேள்வி எழுந்தது? இதனிடையே மத்திய அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்ட கல்விக் கொள்கையில் அந்நிய பல்கலைக் கழகங்கள் நம் நாட்டில் தடையின்றி கடை விரிக்க வகை செய்யப்பட்டுள்ளது

அனைத்துத்துறைகளையும் அந்நியருக்கும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கும் கொடுத்து விட்டு தேசத்தை எவ்வாறு சுய சார்புடையதாக மாற்றுவது என பிரதமர் மோடி அவர்கள் நாட்டு மக்களுக்கு வகுப்பு எடுக்கத் துவங்கி உள்ளார் என்று பத்திரிக்கை செய்திகள் கூறுகிறது. அப்படி என்ன பேசுகிறார் என்றால், ஞாயிற்றுக் கிழமை 'மனதின் குரல்' நிகழ்ச்சி மூலம் உரையாற்றிய அவர், தஞ்சாவூர் பொம்மையை சிலாகித்துப் பேசியிருக்கிறார். தரமான விளையாட்டு பொம்மைகளை உள்நாட்டி லேயே உருவாக்குவோம் என்று கூறிவிட்டு தலையாட்டி பொம்மையை எடுத்துக்காட்டாக கூறியுள்ளார்.

பல ஆயிரம் கோடி கொட்டிக் கொடுத்த ரஃபேல் விமானத்தை பிடிவாதமாக கொள்முதல் செய்யும் பிரதமர், மறுபுறத்தில் பொம்மை உற்பத்தியை உள்நாட்டிலேயே செய்ய வேண்டும் என்கிறார். தாம் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை போல அம்பானி, அதானி போன்ற பெரு முதலாளிகளிடம் நடந்து கொள்வது போல் நாட்டு மக்களும் மாற வேண்டும் என்று கூறி வருகிறார் போலும்.

விவசாயத்தை கார்ப்பரேட்டுகளுக்கு கொடுப்பது, எட்டு வழி சாலை போன்ற திட்டங்கள் மூலம் விவசாயிகளை அவர்களது நிலத்திலிருந்து விரட்டுவது, அவர்களுக்கு உரிய கடன் வசதியை தர மறுப்பது, பயிர் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் ஏமாற்றுவது போன்ற வேலைகளில் மத்திய அரசு ஈடுபட்டு வரும் நிலையில், கொரோனா காலத்திலும் பயிர் நடவு பணிகளை விவசாயிகள் மேற்கொண்டிருப்பதாக பாராட்டுகிறார். விவசாயத்தை பாதுகாப்பதற்கு பதிலாக விவசாயி களை, விவசாயத்தை மத்திய அரசு காவு கொடுத்துக் கொண் டிருக்கிறது. இது நீடித்தால் உணவு



தானிய உற்பத்தி குறைந்து, இறக்குமதியையே நாம் சார்ந்திருக்க வேண்டியிருக்கும்.

நமது பிரதமர் அவர்கள், ராஜபாளையம், கோம்பை போன்ற உள்நாட்டு நாய் வகைகளையே வீடுகளில் வளர்க்க வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார். உள்நாட்டில் பொம்மை நாய்கள் போன்றவற்றோடு நிறுத்திக்கொள்ளும் பிரதமர், கேந்திர துறைகளை அழித்து எப்படி சுய சார்பை உருவாக்குவார் என்பது அவருக்கு மட்டுமே அறிந்த ரகசியம்.

மேற்கண்ட விவரங்களின் தொடர்ச்சியாக மக்களுக்கும் ஊழியர்களுக்கும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் விரோதமாக கடைபிடிக்கும் மத்திய அரசின் கொள்கைகளில் ஒரு சில விபரங்கள்:

## மத்திய அரசின் வெற்று அறிவிப்பு வேலைக்கு உதவாது

பாரதப் பிரதமர் மோடி அவர்கள் இந்திய பொருளாதாரத்தில் புத்துயிர்ப்பு ஏற்பட்டிருப்பதாக கூறியிருந்தார். ஆனால் தற்போது இந்திய ரிசர்வ் வங்கி ஆண்டறிக்கை அதற்கு நேர் மாறாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மைனஸ் 12 சதவீதமாக வீழ்ச்சி காணும் என அதிர்ச்சியை வெளியிட்டிருக்கிறது.

முதல் மற்றும் இரண்டாம் கட்ட ஊரடங்கால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை மதிப்பீடு செய்து இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் ஏற்கனவே பொருளாதாரம் பல காலாண்டுகளாக மந்த நிலையில் இருந்தபோது கொரோனா தொற்றும் சேர்ந்து கொண்டது. கொரோனா பொது முடக்கத்தால் உணவு மற்றும் தயாரிப்பு பொருட்களின் உற்பத்திக்கும் தேவைக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்துள்ளது. அதன் காரணமாக பொருட்களின் விலை மேலும் உயரக்கூடும். அதனைத் தொடர்ந்து நாட்டின் பணவீக்கமும் அதிகரிக்கும். காய்கறிகள், பருப்பு, மாமிசம், மீன் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை உயர்வால் கடந்த ஜூலையில் சில்லறை பணவீக்கம் 6.95 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மைனஸ் 12 சதவீதமாக கடும் வீழ்ச்சியை சந்திக்கும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் நமது பிரதமரோ பொருளாதாரம் புத்துயிர்ப்பு பெற்றிருப்பது மட்டுமல்ல, சமூக முடக்க காலத்தில் மட்டும் இந்தியா 20 மில்லியன் டாலர் அளவுக்கு அன்னிய நேரடி முதலீட்டை பெற்றிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதிலும் உண்மை இல்லை. இதில் 18.4 மில்லியன் டாலர் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தின் பங்கு விற்பனை தொகை ஆகும். இது ஒன்றும் முதலீடு அல்ல, பன்னாட்டு நிறுவனங்களுடன் மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தத்தின் மூலம் வந்திருக்கும் பங்குத் தொகை ஆகும்.

உண்மை இவ்வாறு இருக்க நாட்டின் பிரதமர் தனது நிர்வாக தோல்வியை மூடிமறைக்க எதார்த்த நிலைக்கு மாறாக தொடர்ந்து பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாக பத்திரிகைகளில் வெளிவந்து இருக்கிறது. இது பிரதமர் அவர்களுக்கு வேண்டுமானால் அழகாக இருக்கலாம். ஆனால் அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகல்ல. தற்போது இந்தியாவில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள அரசு தரப்பிலிருந்து செய்யப்படும் பொது முதலீடு மூலம் தான் ஓரளவு சரி செய்ய முடியும் என்கிறது இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை.

ஏற்கனவே இடதுசாரிகள் முன்வைத்த அதே ஆலோசனையை தான் தற்போது ரிசர்வ் வங்கியும் கூறியிருக்கிறது. அரசு மக்கள் கையில் நேரடியாக பணத்தை சேர்ப்பதின் மூலமே நுகர்வு அதிகரித்து உற்பத்தி உயரும். அதன் மூலம் பொருளாதாரம் ஏற்றம் பெறும். வருமான வரி செலுத்தாத அனைத்து குடும்பத்திற்கும் உடனடியாக அடுத்த ஆறு மாதத்திற்கு மாதம் ரூ. 7500 வழங்கிட வேண்டும். 2008ஆம் ஆண்டு அரசு புள்ளிவிவரத்தின்படி மத்திய அரசில் காலியாக உள்ள ஏழு லட்சம் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும். வெற்று பேச்சு வேலைக்கு உதவாது...?

(உதாரணம்: மேற்சொன்ன விஷயங்களில் பிரதானமானது கடந்த 45 ஆண்டுகளில்

இல்லாத வேலையின்மை பிரச்சனை தலைதூக்கி உள்ளது. புலம்பெயர் தொழிலாளர் களுக்காக நமது பிரதமர் மோடி அவர்கள் கடந்த ஜூலை 2020 11ஆம் தேதி வேலை வாய்ப்புக்காக இணையதளம் (ASEEM Portal) ஒன்றை துவக்கி வைத்தார்).

இதில் கடந்த 40 நாட்களில் 69 இலட்சத்திற் கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர். ஆனால் இதுவரை வெறும் 7 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலை கிடைத்துள்ளது.

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் கழகத்தின் (National Skill Development Corporation - NSDE) ஆத்ம நிர்பார் திறமையான ஊழியர் பணியாளர்களை தேர்வு செய்தல் திட்ட இணையதளம் (ASEEM Portal) அளித்த தரவுகளின்படி 514 நிறுவனங்கள் இந்த தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 443 நிறுவனங்கள் 2.92 லட்சம் வேலைகளை வெளியிட்டுள்ளன. இதில் 1.49 லட்சம் பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது என்று தரவுகள் காட்டுகின்றன. எனினும் கடந்த 40 நாட்களில் 7 ஆயிரத்து 700 பேர் மட்டுமே பணியில் சேர்ந்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 2020 14 முதல் ஆகஸ்ட் 21 வரை ஏழு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர். இருப்பினும் அந்த வாரத்தில் வேலைக்குச் சென்றவர்கள் என்று பார்த்தால் வெறும் 691 பேர் தான்.

வேலை தேடுபவர்கள் 42.3 சதவீதம் பேர் பெரிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, அரியானா, தமிழ்நாடு, டில்லியை சேர்ந்தவர்களாக உள்ளனர். இந்த புள்ளி விவரங்களை பார்த்தால் மத்திய, மாநில அரசுகள் வெற்று அறிவிப்பு களாகவும், தவறான புள்ளி விவரங்களையும் வெளியிடுகின்றது.

## விளையாட்டிலும் அரசியல்

இரு உலகக் கோப்பைகளை இந்திய அணிக்கு பெற்றுக் கொடுத்தவர், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் மூன்று விதமான கோப்பைகளை வென்ற ஒரே கேப்டன், பதற்றமடையாத அணித்தலைவர், அதிரடி ஆட்டக்காரர் என பல பெருமைகளுக்கு உரியவர் மகேந்திர சிங் தோனி.

இந்திய கிரிக்கெட்டுக்காக 16 ஆண்டுகள் விளையாடிய தோனி இந்திய கிரிக்கெட் உலகில் அதிக ஆண்டுகள் வெற்றிகரமாக கோலோச்சிய கேப்டன்களில் ஒருவர். தலை சிறந்த தலைமைப் பண்பால் அணியில் அனைவரையும் அரவணைத்து சென்றவர். இந்திய கிரிக்கெட்டுக்கு அவரது பங்களிப்பு அளப்பரியது. 2011 உலக கோப்பையை சச்சின் டெண்டுல்கருடன் சேர்ந்து வென்றார். சர்வதேச கிரிக்கெட்டில் சாம்பியனாக விளங்கும் விராட் கோலியை அரவணைத்து வளர்த்து விட்டார். தோனியிடம் இருந்து பல விஷயங்களை கோலி கற்றுக்கொண்டார். அது இக்கட்டான நேரத்தில் இந்திய அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவியது.

கிரிக்கெட்டில் ஒரு சகாப்தம் முடிந்து விட்டது. தோனியை யாரும் ஒப்பிடுவது கடினம். அந்த அளவுக்கு அவர் வேறுபட்டுத் திகழ்கிறார் என்று முன்னாள் கேப்டனும் கிரிக்கெட் கட்டுப்பாட்டு தலைவருமான சவுரவ் கங்குலியின் வார்த்தைகள் உன்னதமானவை. 2015 உலகக் கோப்பை அரை இறுதியில் தோனி ரன் அவுட் ஆனார். ஆனால் அந்த ஆட்டத்தில் 14 பந்துகளில் இந்தியாவின் கனவு தகர்ந்தது. அதே நிலைமை நான்கு ஆண்டுகள் கழித்து கடந்த ஆண்டு மான்செஸ்டரில் இந்திய அணிக்கு நடந்தது.

இந்தியாவின் உலகக்கோப்பை கனவு தகர்ந்து போன அந்தப் போட்டி தான் தோனியின் கடைசி சர்வதேச கிரிக்கெட் போட்டியாகவும் அமைந்து விட்டது. இந்த நேரத்தில்தான் கடந்தாண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜார்க்கண்ட் தேர்தலில் பிஜேபி தோற்பது உறுதியாகத் தெரிந்தவுடன் தோனியை பிஜேபியில் சேர்த்து அந்தத் தோல்வியை ஈடு கட்டலாம் என திட்ட மிட்டனர். உள்துறை அமைச்சர் அமித் ஷா பலமுறை முயன்றும் தோனி பிடி கொடுக்க வில்லை. எதிர்பார்த்த தோல்வியை பிஜேபி சந்தித்தது. பிஜேபியில் சேர மறுத்ததோடு ஆதரித்து பிரச்சாரம் செய்ய விருப்பமில்லை

என்று தோனி கூறிவிட்டார். இது பிஜேபி தலைமைக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

அப்படி ஒரு சூழலில்தான் பிசிசிஐ வெளியிட்ட இந்திய அணிக்கான வருடாந்திர ஒப்பந்த வீரர்கள் பட்டியலிலிருந்து தோனி நீக்கப்பட்டார். பல்லாயிரம் கோடி ரூபாய் புழங்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தில் தனது அதிகாரத்தை பயன்படுத்தி உள்துறை அமைச்சர் தனது மகன் ஜெய்ஷாவை செயலாளராக நியமித்து விட்டார். ஜெய்ஷா மூலமாக தோனியை அவமதித்து விட்டனர்.

கிரிக்கெட்டில் இந்தியாவின் புகழை உச்சத்திற்கு கொண்டு சென்ற மகத்தான வீரரை வாரியம் அவமதிப்பதை எதிர்த்து இந்நாள், முன்னாள் வீரர்கள் கூட பேச முடியவில்லை. காரணம் இந்திய கிரிக்கெட் வாரியத்திலும் பிஜேபியின் ஆட்டம் தொடங்கியிருக்கிறது. ஒரு போட்டியை நடத்தி தோனி கௌரவமாக விடை பெற அனுமதிக்க வேண்டும் என ஜார்க்கண்ட் முதலமைச்சர் கூறியிருப்பது நியாயமான கோரிக்கை. தோனி தற்போது ஓய்வு பெறக்கூடாது என்று விரும்பும் கோடிக்கணக்கான ரசிகர்கள் அவரது முடிவை ஜீரணித்துக்கொண்டு வழி அனுப்புகிறார்கள்.

## மத்திய அரசின் இந்தி திணிப்புக்கு கீழ்க்கண்ட உதாரணம்

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற யோகா மற்றும் இயற்கை மருத்துவர்களுக்கான ஆன்லைன் பயிற்சி வகுப்பில் அந்த அமைச்சகத்தின் செயலாளர் ராஜேஷ் கோட்சே இந்தியிலேயே உரையாற்றினார். மொத்த பயிற்சி வகுப்பும் இந்தி மொழியில் மட்டுமே நடந்துள்ளது. தமிழகம் உள்ளிட்ட இந்தி தெரியாத மாநில மருத்துவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், ராஜேஷ் கோட்சே, இந்தி தெரியவில்லை என்றால் வகுப்பிலிருந்து வெளியேறுங்கள் என்று ஆணவமாக கூறியதற்கு தமிழக கட்சிகள் அனைத்தும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

சென்னை விமான நிலையத்தில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியைப் பார்த்து, மத்திய பாதுகாப்பு படை போலீஸ் ஒருவர் இந்தி தெரியவில்லை என்றால் நீங்கள் இந்தியரா? என்று கேட்டது பெரும் சர்ச்சையையும் கண்டனத்தையும் சந்தித்த நிலையில் இந்த நிகழ்வு நடந்துள்ளது.

ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளராக ராஜேஷ் கோட்சே நியமிக்கப்பட்ட போது பெரும் சர்ச்சை எழுந்தது. இந்நிலையில் அவருக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் பணி நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது. பொதுவாக மத்திய அமைச்சகத்தின் செயலாளர்களாக ஐஏஎஸ் அதிகாரிகளே நியமிக்கப்படுவார்கள். ஆனால் ஐஏஎஸ் அதிகாரி அல்லாதவராக ராஜேஷ் அந்த பொறுப்பில் நியமிக்கப்பட்டார்.

இதற்கு முக்கிய காரணம் இவர் நெடுங்காலமாக ஆர்எஸ்எஸ் அமைப்புடன் தொடர்பு உடையவர் என்பது தான். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த இவர் பிரதமர் மோடிக்கு நெருக்கமானவர். ஆயுர்வேத மருத்துவ நிறுவனத்தை 2015ஆம் ஆண்டு பிரதமர் அவர்கள் துவக்கி வைத்தார்.

ஆயுர்வேத மருத்துவரான கோட்சேவின் மனைவி ஆயுர்வேத நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். எனினும் ஆயுஷ் அமைச்சகம் நடத்தும் பயிற்சி நிலையத்தில் இவர் பணியமர்த்தப்பட்டதும் சர்ச்சைக்குள்ளானது.

இவ்வாறு தொடர்ந்து சர்ச்சையில் சிக்கிய இவர் தற்போது தன்னுடைய இந்தித் திணிப்பின் மூலம் பலத்த கண்டனத்தை எதிர் கொண்டுள்ளார். வகுப்பில் இடையூறு செய்த வர்களை தான் வெளியேறுமாறு கூறியதாக இவர் கூறும் காரணம் ஏற்கத்தக்கதல்ல.

யோகா மற்றும் இயற்கை மருத்துவம் எந்த ஒரு மொழிக்கும் மட்டும் சொந்தமானதல்ல. இந்திய அளவிலான பயிற்சி வகுப்பை ஒரு மொழியில் மட்டும் நடத்துவது என்பது அப்பட்டமான வெறித்தனம் அன்றி வேறல்ல. பிரதமரின் நண்பர் என்பதற்காகவே ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளராக நியமிக்கப்பட்ட இவர் அந்த பொறுப்பில் நீடிக்கும் அருகதையானவரா என்ற கேள்வி எழுகிறது. இவரைப் போன்றவர்களின் போக்கினால்

இந்திய ஒருமைப்பாடு கூட்டாட்சித் தத்துவமும், மொழிகளின் சமத்துவமும் சிதைக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது.

## உச்சநீதிமன்ற தீர்ப்பு போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

பட்டியலின வகுப்பில் அருந்ததிய மக்களுக்கு உள் ஒதுக்கீடு செய்வதற்கான உரிமை மாநில அரசுக்கு உண்டு என்று உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பளித்துள்ளது ஆறுதல் அளிப்பதாக உள்ளது. எனினும் உள் ஒதுக்கீடு முறை செல்லாது என்று 2004ஆம் ஆண்டு 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், இந்த வழக்கு 7 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனினும் இப்போது அருந்ததியர் உள் ஒதுக்கீடு தடையின்றி தொடரும் நிலை உருவாகியுள்ளது.

இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு செய்வதற்கான உரிமை மாநில அரசுகளுக்கு உண்டு என்று உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு பல்வேறு வழக்குகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். மருத்துவ படிப்புக்கான அகில இந்திய தொகுப்பில் அந்தந்த மாநிலங்களில் உள்ள இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும். அந்த அடிப்படையில் தமிழகத்தில் பிற்படுத்தப் பட்டோருக்கு அகில இந்திய தொகுப்பில் 50 சதவீதம் வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டிலும் இந்த தீர்ப்பு கவனத்தில் கொள்ளப்படும் என்று நம்பலாம்.

சாதிய ஒடுக்குமுறை அமைப்பின் காரணமாக அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடி மூட்டையிலும் மூட்டையாக அமிழ்த்தப்பட்டுள்ள தங்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும் என அருந்ததிய அமைப்புகள் போராடி வந்தன. இடதுசாரி கட்சிகள் இந்த கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து பொதுவெளியில் போராட்டங்களை நடத்திய நிலையில் தான் இந்த கோரிக்கை விரிவடையத் துவங்கியது என்பதையும் மறுக்க முடியாது.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியும் இதற்காக அனைத்துப் பகுதி மக்களையும் இணைத்துக்கொண்டு போராடியது. இடதுசாரி கட்சியின் மாநில செயலாளர் வரதராஜன் தலைமையில் பேரணி நடத்தப்பட்டு அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் மனு கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மாநில திமுக அரசு 2009ஆம் ஆண்டில் அருந்ததிய மக்களுக்கு 3 சதவீத ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றியது. புதிய தமிழகம் கட்சி இந்த உள் ஒதுக்கீட்டை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்ததோடு நீதிமன்றத்திற்கும் சென்றது.

இந்நிலையில் உள் ஒதுக்கீடு வழங்குவதற்கான உரிமை மாநில அரசுகளுக்கு உண்டு என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் நடைமுறையில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எனும் வகைப்பாடு மற்றும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ஒதுக்கீடு போன்றவையும் பாதுகாக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. உள் ஒதுக்கீடு தொடர்பான வழக்கு 7 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளதால் சமூக நீதிக்கான சட்டப் போராட்டத்தை தொடர வேண்டியுள்ளது.

## 7.8.2020 ஆர்பாட்டம்

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பாக கடந்த ஜுலை 7ஆம் தேதி விடுமுறை நாளில் முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஜனநாயகப்பூர்வமாக சமூக இடைவெளியுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றதற்கு சமூக நலத்துறை ஆணையர், சத்துணவு ஊழியர்களின் சம்பளத்தை பிடித்தம் செய்ய உத்தரவிடப் பட்டது. இது ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கும், தொழிற்சங்க உரிமையின் குரல் வளையை நெறிக்கும் செயலாகும். இதுவரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஜனநாயகபூர்வமான பல்வேறு

போராட்டங்களை நடத்தியுள்ளோம். ஆனால் இன்றைக்கு தமிழக அரசு இந்த ஜனநாயக விரோத சம்பளப் பிடித்தம் உத்தரவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின் அடிப்படையில் அனைத்து வட்ட கிளைகளிலும் எழுச்சிகரமான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டம் ஊழியர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியது. தமிழகம் முழுவதும் உணர்வுபூர்வமாக இவ்வியக்கம் நடத்திய மாவட்ட மையம், வட்டக் கிளை, முன்னணி ஊழியர்கள், தோழமை சங்க நிர்வாகிகளுக்கும் மாநில மையத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## 10.8.2020 தேசிய பாதுகாப்பு நாள் ஆர்ப்பாட்டம்

நமது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு கூட்ட முடிவின்படி, இந்தியாவில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து "தேசத்தை பாதுகாப்போம்" (Save India Day) என்ற ஒற்றை கோஷத்துடன் மிக எழுச்சியான ஆர்ப்பாட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநிலம் முழுவதும் அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்காதே, தொழிலாளர் நலச்சட்டங்களை திருத்தாதே, புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய், அரசு துறைகளில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை பூர்த்தி செய், ஊழியர் விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கைவிட வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தேசத்தை பாதுகாக்கக்கூடிய இந்த இயக்கத்தில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கேற்று தேசபக்த கடமையை நிறைவேற்றிய அனைத்து தோழர்களுக்கும் மாநில மையத்தின் சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆம் தோழர்களே,

இரண்டாம் உலகப்போருக்கு அடிப்படையாக இருந்த ஜெர்மனியின் ஹிட்லர் மாபெரும் சர்வாதிகாரி என்று உலகம் முழுவதும் தூற்றப்பட்டார். "ஆரிய இனமே வாழத் தகுந்தது... வேறினங்கள் எல்லாம் அழிய வேண்டியது" என பாசிஸ ஒடுக்குமுறையை உலகம் முழுக்க பரப்புவதே தன் கொள்கையாக இருந்தது. ஆனால் அவனை அந்த நிலைக்கு கொண்டு வந்தது அந்நாட்டின் ஆளும் வர்க்கங்களான முதலாளி வர்க்கங்களே ஆகும். இந்த தவறான பொருளாதாரக் கொள்கையின் விளைவாக எழுந்த பொருளாதார நெருக்கடிகளே ஹிட்லரைத் தூண்டி விட்டன என வரலாறு பதிவு செய்துள்ளது.

இந்தியா இன்று சந்தித்து வரும் அல்லது எதிர்காலத்தில் மேலும் அதிகமாக சந்திக்க உள்ள நெருக்கடிகளுக்கு காரணம் இந்திய அரசு கடைபிடிக்கும் தவறான பொருளாதாரக் கொள்கைகளே. இன்று இந்திய நாடாளுமன்ற அரசுக் கட்டிலில் அமர விரும்பும், இடதுசாரி கட்சிகள் தவிர்த்து எந்த கட்சியும் உலகமயமாக்கலுக்கு எதிரான மாற்று கொள்கையை மாற்று திட்டத்தை கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் பன்னாட்டு முதலாளிகளின் லாப வெறி மற்றும் பொருளாதார முறைகள்தான் அரசு பயங்கரவாதத்திற்கு அடிப்படை என்றும், அதுவே பாசிச உருவாக்கத்திற்கான அடிப்படைகள் என்பதும் சுட்டிக் காட்டப்படும்போதுதான் அது பற்றிய உண்மையான விழிப்புணர்வு பிறக்கும். அப்போது தான் இத்தகைய நாசகரக் கொள்கைகளுக்கு முடிவுகட்ட முடியும். அதற்கான முயற்சிகளில் புதிய புதிய வடிவங்களில் மாற்றுக் கொள்கைகளை முன்னிறுத்தி போராடிவரும் இயக்கங்களோடும் அனைத்து தொழிற்சங்கங்களோடும் இணைந்து மக்களை நோக்கி பயணிக்க வேண்டியதும் தேசத்தை பாதுகாக்க வேண்டியதும் தொழிற்சங்கங்களின் பிரதான கடமையாகும். ■

# செப்டம்பர் 13 தோழர் ஜதீன்தாஸ் நினைவு நாள்

**தோ**ழர் பகத்சிங் 1929ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சதிவழக்கில் கைதுசெய்யப்பட்டு லாகூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் விடுதலைப் போராளிகள் கிரிமினல் கைதிகள் போலத் தரக்குறைவாக நடத்தப்பட்டனர்.



இதனைக் கண்டு கொதித்த தோழர் பகத்சிங் எதிர்த்துப் போராட முடிவு செய்தார்.

சிறையில்... அதுவும் பரங்கியர் சிறையில்

போராட்டம் என்பது சாத்தியமா?

எந்த ஆயுதத்தைக் கையில் எடுப்பது?

எவ்வாறு தீர்வு காண்பது? என்று புரட்சியாளர்கள் சிறையில் சிந்தித்தபோது அவர்கள் கையில் எடுத்த ஆயுதம்தான் அகிம்சை என்னும் அற்புத ஆயுதம்.

அகிம்சை என்னும் போராட்டத்திற்கு

ஆயுதங்கள் தேவையில்லை...

உடல்பலம் தேவையில்லை...

ஆன்மபலம் மட்டுமே வேண்டியிருந்தது.

கட்சியின் மத்தியக்குழு முடிவின்படி தோழர் பகத்சிங் உள்துறை அமைச்சருக்கு கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்துக் கடிதம் எழுதினார்.

விடுதலைப் போராட்டக் கைதிகள் அரசியல் கைதிகளாக நடத்தப்படவேண்டும்...

குளிப்பதற்கு வசதி செய்து தரப்பட வேண்டும்.

சுத்தமான ஆடைகள் வழங்கப்பட வேண்டும்.

தரமான உணவு வழங்கப்பட வேண்டும்..

ஒவ்வொரு கைதிக்கும் செய்தித்தாள் வழங்க வேண்டும்.

படிக்கவும் எழுதவும் தேவையான பொருட்களை வழங்க வேண்டும்..

அரசியல் கைதிகளுக்கென தனிப்பிரிவு சிறைவளாகத்தில் அமைக்கப்பட வேண்டும்.

கட்டாய உடலுழைப்பு செய்ய விடுதலைப் போராளிகளைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

பணியுமா? பரங்கியர் அரசு...

மேலும் கைதிகளைக் கொடுமை செய்யத் துணிந்தது.

எனவே தோழர் பகத்சிங் உள்ளிட்ட தோழர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அகிம்சை என்னும் ஆயுதம் ஏந்தினர்.

உண்ணாவிரதம் தோழர்களுக்குப் புதிது.

ஆனால் அதே சிறையில் இருந்த கட்சியின் மூத்த தோழர் ஜதீன்தாஸ் மட்டுமே உண்ணாவிரதம் இருந்து அனுபவம் பெற்றவர். எனவே அவரிடத்தில் தோழர்கள் ஆலோசனை செய்தனர்.

தோழர் ஜதீன்தாஸ் தெளிவுபடக் கூறினார்.

தோழர்களே...

அகிம்சைப் போராட்டம் ஆயுதப்போராட்டத்தை விட மிகக்கடினமானது.

போலிசாரின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாவது எளிது.

உயிர் உடனே போய்விடும்.

உண்ணாவிரதம் என்பது அப்படியல்ல.

அணுஅணுவாக சாவை எதிர்கொள்ள வேண்டும்.

தூக்குமேடை ஏறி...

கழுத்தில் கயிற்றை சுருக்குவது எளிது.

ஆனால் வயிற்றை சுருக்குவது மிகக்கொடிது.

ஆயுதப்போராட்டத்தில் ஆயுதம் தீர்ந்துவிட்டால் நமது போராட்டம் முடிவுக்கு வந்து விடும்.

ஆயுதப்போராட்டத்தில் நாம் பதுங்கிப் பாயலாம்.

ஆயுதத்தைக் கீழே போட்டு சரணடையலாம்.

ஆனால் அகிம்சைப் போராட்டத்தில்

பின்வாங்குவது என்பதே கிடையாது.

கோரிக்கைகள் தீரும்வரை சமரசம் என்பதே கிடையாது.

ஆயுதபலத்தை விட ஆயிரமாயிரம் மடங்கு ஆன்மபலம் வேண்டும் என்று தன் தோழர்களுக்கு தோழர்.ஜதீன்தாஸ் அறிவுறுத்தினார்.

தோழரின் அறிவுரையை பகத்சிங் நெஞ்சில் நிறுத்தினார்.

ஜூன் 15ம்தேதி உண்ணாவிரதம் ஆரம்பமானது.

ஜூலை 10ம்தேதி லாகூர் சதிவழக்கு விசாரணை ஆரம்பமானது.

விசாரணையின்போதும் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தார் தோழர் பகத்சிங்.

பலவழிகளிலும் உண்ணாவிரதத்தை முறியடிக்க பரங்கியர்கள் முயற்சி செய்து தோல்வியுற்றனர்.

கைதிகளுக்கு தண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டது.

பாலகர்கள் மயங்கிவிடுவார்கள் என நினைத்து தண்ணீர்க்குடத்தில் பால் வைக்கப்பட்டது.

தோழர்கள் பால்குடத்தை உடைத்து எறிந்தார்கள்.

பழங்களும், இனிப்புகளும் சிறைக்குள் அனுப்பப்பட்டன.

அனைத்தையும் ஆன்மபலத்தோடு ஒதுக்கித்தள்ளினர் தோழர்கள்.

மருத்துவர்களை அனுப்பி வாயில் குழாய் செருகி உணவை வலுக்கட்டாயமாக செலுத்தினர்.

பற்களால் குழாயைக் கடித்து...

மனபலத்தோடு மருத்துவரோடும் மரணத்தோடும் போராடினர் தோழர்கள்..

தோழர்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்ட தோழர் ஜதீன்தாஸ் மருத்துவர்களின் மனிதாபிமானமற்ற செயலால் நுரையீரலில் உணவு செலுத்தப்பட்டு செப்டம்பர் 13 அன்று உயிர் துறந்தார்.

ஜதீன்தாஸின் மரணம் உண்ணாவிரதத்தை மேலும் உரமேற்றியது.

முடிவாக 1929 அக்டோபர் 4ந்தேதி உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது.

பகத்சிங், சுகதேவ், மற்றும் பி.கே.சின்ஹா ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அரசியல் கைதிகளுக்கான உரிமைகளைப் பெற்றார்கள்.

**- பெரணமல்லூர் சேகரன்**

# அமெரிக்கா அஞ்சிய ஆசிய சிங்கம்

இந்தோ சீனம் என்று அழைக்கப்பட்ட வியட்நாம் பிரெஞ்ச் காலனி ஆதிக்கத்தின் கீழ் நீண்டகாலம் அடிமைப்பட்டிருந்தது. பிரான்ஸ் ஆதிக்கத்தின் கீழ் தன் நாட்டு மக்கள் படும் துயரங்களை கண்டு மனவேதனையுற்ற 17 வயது இளைஞன் ஒருவன் ப்ரெஞ்ச் ஆளுநருக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதினான். அதன் பதிலுக்காக காத்திருந்த இளைஞனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. தாய் தந்தை மூத்த சகோதரன் மூத்த சகோதரி என தன் குடும்பத்துடன் வசித்து வந்த அந்த இளைஞன் வீட்டின் முன் நள்ளிரவில் பிரெஞ்ச் படை நின்றது. குடும்பத்தலைவரை பார்த்து நீங்கள் பிரெஞ்ச் ஆட்சியை கவிழ்க்க சதி செய்கிறீர்கள் உங்களை கைது செய்கிறோம் என்று குடும்பத்ினர் அனைவரையும் கைது செய்து போலீஸ் படையின் லாரியில் ஏற்றினர். அப்போது எலும்பும் தோலுமாக இருந்த அந்த இளைஞனைப் பார்த்து இவனாவது அரசுக்கெதிராக சதி செய்வதாவது என கூறிக்கொண்டே அவனை லாரியில் ஏற்றாமல் பிடித்து தள்ளினர். அவர்தான் பின்னாளில் கொரில்லா போரை தலைமை தாங்கி



வழிநடத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை உலக வரலாற்றில் தோல்வியுறச் செய்த ஒரே ஒப்பற்ற தலைவர் ஹோ சி மின்.

முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தபோது அமெரிக்க அதிபரான உட்ரோவில்சன் வார்சேல்ஸ் நகரில் சமாதான மாநாடு நடத்தினார். தங்கள் நாட்டின் விடுதலைக்காக மாநாட்டில் வலியுறுத்துவதற்காக அடிமைப்பட்ட காலனி நாடுகளான இந்தியா, சீனா, கொரியா, அயர்லாந்து அரபு நாடுகளிலிருந்தும் மக்கள் பிரதிநிதிகள் அங்கு வந்திருந்தனர். 26 வயதே நிரம்பிய நிகுயன் அய்குவாக் (ஹோ சி மின்) என்ற இளைஞன் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் தன் நாடு அடிமைப்பட்டு கிடப்பதையும் அதனால்

தன்நாட்டு மக்கள் அனுபவித்துவரும் சொல்லொன்னா துயரங்களையும் உருக்கமாக எழுதி மாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த பிரெஞ்ச் தூதரிடம் இந்தோ சீன (வியட்நாம்) மக்கள் சார்பாக மனு அளித்தார். ஆனால் வார்சேல்ஸ் மாநாடு காலனி ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்ட நாடுகளுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை இவர்களிடம் ஜனநாயகம் என்பது வெறும் வெற்று முழக்கமாகவே இருந்தது.

சுதந்திரம் என்பது ஒருவர் கொடுத்து வாங்கும் கடைச் சரக்கல்ல அது போராடிப்பெற வேண்டியது என்பதை உணர்ந்த அந்த இளைஞன் பாரீஸ் நகருக்கு புறப்பட்டு சென்று ஒரு சிறிய குடிசையில் தங்கி வேலைபார்த்து வந்தார். அங்கே ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. பாரீஸில் வெளியாகும் பீப்பிள் (மக்கள்) என்ற பத்திரிக்கையில் தன் நாட்டின் விடுதலைக்காக கொடுத்த அறிக்கை வெளியாகியிருந்தது. அந்த பத்திரிக்கையின் ஆசிரியர் வேறு யாருமல்ல மாமேதை காரல்மார்க்ஸ்-ன் மருமகன் ஷார்ல் லாங்கே என்பவர்தான். அவரது நட்பின் மூலம் வியட்நாமை பற்றி பத்திரிக்கைகளில் தொடர்ந்து எழுதி வந்தார். மேலும் பிரெஞ்ச் மொழியையும் கற்றுக்கொண்டு பிரெஞ்ச் பத்திரிக்கைகளிலும் எழுதி வந்தார். இது தவிர ரஷ்யா சீன மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். கம்யூனிச பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்தார். மாபெரும் தத்துவ மாமேதை காரல்மார்க்ஸ் மீதும் மாமேதை ரஷ்ய புரட்சியாளர் லெனின் மீதும் அளவு கடந்த பற்று கொண்டவர். பாரிசில் ப்ரெஞ்ச் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினரானார். மிகவும் வறுமையில் உழன்ற போதும் தன் நாட்டின் விடுதலைக்காக பாடுபடுவதே இலட்சியம் என்றிருந்தார். எதையும் தாங்கும் மன உறுதியும் வலிமையும் கொணடவர்கள்தான் பக்குவப்பட்ட போராட்டக்காரர்களாக மாற முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தினார்.

வறுமை நிலையிலும் "பரியா" என்ற பத்திரிக்கையை தொடங்கினார். அந்த பத்திரிக்கையின் ஆசிரியராகவும், கடைகளில் விநியோகிப்பவரும் அவரேதான் இருந்தார். சிறிய ஏடாக வெளிவந்த பரியாவைக் கண்டு பிரான்ஸ் அஞ்சியது. தடை செய்தது ஆனாலும் எகாதிபத்திய எதிர்ப்பாளர்களால் தொடர்ந்து மறைமுகமாக வினியோகிக்கப்பட்டது. பரியா இளைஞர்களை ஈர்த்தது. வியட்நாமின் தேசபக்தர்கள் பலர் மறைமுகமாக பணம் அனுப்பி உதவினர். நிகுயன் அய்வாக்கின் புகழ் வியட்நாம் முழுவதும் பரவியது. கடுமையான அடக்கு முறையில் சிக்குண்டு கிடக்கும் தனது தாயகத்தை மீட்க மக்களிடம் விடுதலை வேட்கையை எழுச்சியை ஏற்படுத்திட முதலில் ஏந்திய ஆயுதம் பத்திரிக்கைதான். அதன்மூலம் வியட்நாமில் பிரெஞ்ச் அடக்கு முறைகளும் வியட்நாம் மக்கள் பட்ட துன்பங்களும் உலகிற்கு வெளிச்சமிட்டு காட்டினார். தன்நாட்டின் விடுதலைக்காக தன் வாழ்நாள் முழுவதும் பயணித்த பாதையையும் இவர் ஆயுதமாக மாற்றிக் காட்டியவர். வரலாற்றில் பல முறை இறந்ததாக அறிவிக்கப்பட்டு பீனிக்ஸ் பறவை போல மீண்டு வந்து எதிரிகளை கலங்கடித்தவர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இந்தோ சீனம் என்று அழைக்கப்பட்ட கம்போடியா, லாவோஸ் தாய்லாந்து உள்ளடக்கிய பிராந்தியத்தை பிரான்ஸ் தன் காலனி ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரமுயன்றது. இதை எதிர்த்த இடதுசாரி வியட்நாமின் கூட்டுப்படைகள் 1946 ம் ஆண்டு முதல் 1954 வரை 10 ஆண்டுகள் சண்டையிட்டன. வியட்நாமின் விடுதலைக்காக பிரான்ஸ் அரசுக்கு எதிராக வியட்நாமின் கம்யூனிச படைகள் போரிட்டது. இந்த போரின் முடிவில் கம்னிஸ்டுகள் தலைமையில் வட வியட்நாம் புரட்சியாளர் ஹொ சி மின் தலைமையில் ஆட்சி அமைந்தது. அதேசமயம் அமெரிக்க அதிபராக

பொறுப்பேற்ற ஜான் கென்னடி கிழக்காசிய கம்யூனிச செல்வாக்கை அழிப்பதற்காக தென் வியட்நாமிற்கு ஆதரவாக உள்நாட்டுப் போரில் தலையிட்டார். வட வியட்நாம் படை ரஷ்யா, சீனா போன்ற கம்யூனிச நாடுகளால் ஆதரிக்கப்பட்டது. தென் வியட்நாம் படை அமெரிக்கா, தென் கொரியா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து போன்ற கம்யூனிச எதிர்ப்பு நாடுகளால் ஆதரிக்கப்பட்டது. அமெரிக்கா ஏகாதிபத்தியம் பேரழிவு ஆயுதங்களை போரில் பயன்படுத்தியது. பாஸ்பரஸ் குண்டுகளை எறிந்து வான் வழி தாக்குதல் நடத்தியபோது வியட்நாமியர்கள் பூமியில் பதுங்கு குழிகள் அமைத்து அதன் மூலம் கொரில்லா தாக்குதலை நடத்தினர். கொரில்லா தாக்குதலால் அமெரிக்கப்படைகள் நிலைகுலைந்து போனது.

1968-ல் உச்சகட்டமாக வட வியட்நாம் சோன்மை என்ற கிராமத்தில் குண்டுவீசி பெண்கள் குழந்தைகள் முதியவர்களை கொன்று குவித்தது . அமெரிக்கப்படையின் வெறியாட்டம் உலகிற்கு தெரிந்தபோது உலக நாடுகள் அமெரிக்காவிற்கு கண்டனம் தெரிவித்தன. அதன்பிறகு இரண்டாண்டுகள் நீடித்த போரில் 1975ஆம் ஆண்டு தெற்கு வியட்நாமை கம்யூனிச அரசு கைப்பற்றியபின் ஒருங்கிணைந்த வியட்நாம் நாடாக விடுதலைப்பெற்றது. இந்த போரில் வியட்நாம் போராளிகள் பொது மக்கள் என 38 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். உலக போர் வரலாற்றில் மிக அதிகமாக 2000 குண்டுகள் வீச்சு தாக்கதலுக்கு உள்ளாகியிருந்தது லாவோஸ். கம்யூனிசத்தை அழித்தொழிக்க வேண்டுமென்று அமெரிக்கா ஆடிய கோரத்தாண்டவம் முடிவுக்கு வந்தது. இது மக்களால் மக்களுக்காக மக்களே நடத்திய போர். எதிரிகள் ஒரு நாட்டின் இராணுவத்தை மட்டும் எதிர்கொள்ளவில்லை வட வியட்நாமின் ஒவ்வொரு குடிமகனையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. வயல் வெளியில் பணிபுரியும் பெண்கள் அசாத்தியமாக எதிரிகளின் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் படை வீரர்களாக நின்று போரிட்டனர். அந்த தியாகம் தான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை கலங்கடித்து தோல்வியை தழுவச் செய்தது.

கம்யூனிச பாதையில் ரஷ்ய புரட்சியாளர் லெனினுக்கு அடுத்து முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை எதிர்த்து புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்கத்தை நிலை நாட்டிய புரட்சிவீரர் ஹோ சி மின் தனது 79வது வயதில் செப்டம்பர் 02, 1969ல் மறைந்தார். அவர் தனது இறுதி நாட்களில் பொதுவுடைமை கட்சி ஊழியர்களை அழைத்து அவர்களிடம் தோழர்கள் காரல்மார்க்ஸ், லெனின் ஆகியோருடனும் மூத்த தோழர்களுடனும் சேரப்போகும் நாளை எதிர்நோக்கி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன் "நமது கட்சி அதிகாரத்தில் உள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும், ஒவ்வொரு ஊழியரும் புரட்சிகர ஒழுக்க உணர்வுகளோடு ஆழ்ந்து ஒன்றிவிட வேண்டும். அவர்கள் கடும் உழைப்பை நல்க வேண்டும். சிக்கனமாக செயல்பட வேண்டும். பூர்ணத்துவத்தை அடைந்திருக்க வேண்டும். பொது நலனுக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். தன்னலத்தை முற்றாக கைவிட வேண்டும். நமது கட்சி தன் பரிபூர்ண தூய்மை நிலையை காப்பாற்ற வேண்டும். மக்களின் தலைவனாகவும், தான் வாழும் பகுதியின் விசுவாச ஊழியனாக விளங்க வேண்டும். என்று வியட்நாமின் பொதுவுடைமைக் கட்சி ஊழியர்களுக்கு கூறிய அறிவுரை உலக பொதுவுடைமைக் கட்சிகள் அனைத்திற்கும் பொருந்தும்.

“நமது மலைகள் எப்போதும் இருக்கும், நமது ஆறுகள் எப்போதும் இருக்கும், நமது மக்கள் என்றென்றும் இருப்பார்கள், ஆக்கிரமிப்பாளர்கள் முறியடிக்கப்படுவார்கள், அதற்குப் பிறகு பத்து மடங்கு அழகானதாக நம் நாட்டை நாம் மீண்டும் கட்டமைப்போம்”- **ஹொ சி மின்**

**- தெ. வாசுகி**

# அமெரிக்க வல்லரசை மண் கவ்வ வைத்த வியட்நாம் போர்

வியட்நாம் போராளிகள் அனைவரும் அந்த மண்ணின் மைந்தர்கள். உலகின் மிகப்பெரிய ஏகாதிபத்திய அரசிடம் அடிமைப்படாமல் சுதந்திரம் மட்டும் எங்கள் கனவு என முழங்கிய வியட்நாம் போர் வரலாற்றில் மனித இனத்தை மீட்டிருக்கிறது.

மக்கள் நம்பிக்கையாய் திகழ்ந்த ஹோசிமின் மிக கடுமையான உழைப்பாளி சிறு வயது முதல் அவர் படிக்கும் காலத்தில் ரூசோவை கற்ற போது பிரஞ்சு புரட்சியின் முழக்கமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதை முழங்கினார். எந்நேரமும் உழைப்பும், படிப்பும் செயலாக்கத்தின் முன்மாதிரியாக இருந்துள்ளார். இது குறித்து சோவியத்தின் நிருபர் ஒருவர் பேட்டி கண்டபோது ஹோசிமின் அன்றாட வாழ்க்கை குறித்து கேள்விக்கு பதில் அளிக்கையில் ஹோசிமின் “நான் அதற்கு பழகிவிட்டேன் எப்போது வேண்டுமானாலும் எழுந்து கிளம்பிவிடலாம். புரட்சியின் போதும் தலைமறைவு வாழ்க்கையின் போதும் இதனை கற்றுக் கொண்டேன் எழுந்து புறப்பட 5 நிமிடங்கள் போதும் என பதிலளித்தார்.

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு இந்தோசீனா என்ற அழைக்கப்பட்ட கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து உள்ளடக்கிய பிராந்தியத்தை பிரான்ஸ் மீண்டும் வர முயன்றது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இடதுசாரி வியட்நாமின் கூட்டுப்படைகள் 1946 முதல் 1954 வரை பத்து ஆண்டுகள் சண்டையிட்டன. வியட்நாமின் விடுதலைக்காக, பிரான்ஸ் அரசுக்கு எதிராக வியட்நாமிய கம்யூனிச படைகள் போரிட்டது. 1955ம் ஆண்டு முதல் ஜெனிவா மாநாட்டின் மூலம் வியட்நாம் இரண்டாக பிரிக்கப்பட்டது. இந்த போரின் முடிவில் கமியூனிஸ்ட்டுகள் தலைமையில் வட வியட்நாம் புரட்சியாளர் ஹோசிமின் தலைமையில் ஆட்சி அமைந்தது. மேற்கத்திய நாடுகளின் ஆதரவில் பிரதமராக ங்கோ டின் டிஎம் தெற்கு வியட்நாமில் ஆட்சி அமைத்தார். ஒருங்கிணைந்த வியட்நாம் ஒன்றே தீர்வு” என்றார் புரட்சியாளர் ஹோசிமின் 1960ல் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற ஜான் கென்னடி, கிழக்காசிய கம்யூனிச செல்வாக்கை குறைப்பதற்காகவே நேரடியாக உள்நாட்டு போரில் தலையிட்டார்.

வடவியட்நாம் படை சோவியத் ஒன்றியம் சீனா மற்றும் பிற கம்யூனிச நாடுகள் ஆதரிக்கப்பட்டது. தெற்கு வியட்நாம் படை அமெரிக்கா, தென்கொரியா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து பிற கம்யூனிச எதிர்ப்பு அணியால் ஆதரிக்கப்பட்டது. குச்சி என்னும் சைகான் நதிக்கரை ஓரத்தில் உள்ள குச்சி சுரங்கப்பாதையானது 75 மைல்



நீளம் கொண்ட மிக நீண்ட போர் சுரங்கம் இங்கு தான் தெற்கு மற்றும் வடக்கு வியட்நாம் கூட்டு படைகள் தங்களின் தாக்குதலுக்கான இராணுவ அமைப்பை நிறுவியிருந்தது. குச்சி சுரங்கபாதை தான் தெற்கு மற்றும் வடக்கு வியட்நாம் படைகள் தங்குவதற்கும், ஒளிந்திருந்து தாக்கவும், ஆயுதம் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டது. இதை அமெரிக்க ராணுவம் என்கின்றார்கள். மேற்கத்திய நாடுகள் பேரழிவு ஆயுதங்களையும் பாஸ்பரஸ் குண்டுகளையும் கையாண்டபோது கம்யூனிச படைகள் கொரில்லா தாக்குதலைக் கையாண்டன. கொரில்லா தாக்குதலால் மேற்கத்திய அமெரிக்கா படை பின் வாங்கியது. 1968 சோன்மை என்ற கிராமத்தில் குண்டு வீசி பெண்கள் குழந்தைகள் ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தது அமெரிக்கபடை. உலக நாடுகள் பலவும் தங்களின் எதிர்ப்புகளை தெரிவித்த நிலையில் அமெரிக்காவிலும் எதிர்ப்பு துவங்கியது. வேறு வழியின்றி 1973ல் அமெரிக்க படைகள் வெளியேறின.

1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தெற்கு வியட்நாம் தலைநகரை கம்யூனிச அரசு கைப்பற்றியது. போரில் மொத்தம் போராளிகள், மக்கள் என 3.8 மில்லியன் பேர் வரை கொல்லப்பட்டனர். 1976ல் ஒருங்கிணைந்த விடுதலை பெற்றது. 1964 முதல் 1973 வரை சுமார் 10 ஆண்டுகளில் 2.1 பில்லியன் டன் வெடி குண்டுகள் இன்றும் அந்த மண்ணில் புதைந்து மக்களை கொன்று கொண்டுதான் இருக்கிறது. உலகின் நீண்ட நாட்கள் நடைபெற்ற போர்களில்; வியட்நாம் போரும் ஒன்றாகும். வடக்குதெற்கு வியட்நாமிற்கு இடையேயான போரானாலும் இதில் அமெரிக்காவின் பங்கு அதிகம். பொதுவுடைமை சித்தாந்தத்திற்கு எதிரான போராகவும் பெரும் ஆயுதபலம் மற்றும் பணபலத்தை பிரயோகித்தாலும் வட அமெரிக்கர்களுக்கு தோல்வியை கொண்டு வந்தது. அமெரிக்கா, போரில் தோற்று வெளியேறியது என்று வியட்நாமில் மட்டுமே.

(செப்டம்பர் 3 ஹோசிமின் நினைவு தினம்)

\- மு.பாஸ்கரன்



# பெண்ணுரிமையோடு சொத்துரிமையும் காப்போம்

மத ரீதியிலான, சாதி ரீதியிலான ஒடுக்குமுறையை தாண்டி பாலியல் ரீதியான ஒடுக்கு முறையில் ஆதிக்கம் செலுத்தி வரும் நாடுகளில் நம் நாடும் முன்னணியில்தான்... ஜனநாயக மாதர் சங்கம் போன்ற பல அமைப்புகள் காலம் காலமாக போராடி பெற்ற பெண்களுக்கான உரிமைகள் எல்லாம் இன்று பின்னோக்கி சென்று கொண்டு இருக்கின்றன. *1929*-ம் ஆண்டு தந்தை பெரியார் பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உண்டு என்று கூறினார். அது *12* ஆகஸ்ட், *2020*-ல் தான் உத்திரவாதப் படுத்தப்பட்டுள்ளது. ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்தில் பங்கு உண்டு என பொதுவாக தெரிகிறதே ஒழிய, பெண்களுக்கு எப்போதெல்லாம் சொத்து கிடைக்கும்? என்னென்ன உரிமை இருக்கிறது என்று தெரிவதில்லை. பெண்களுக்கான சொத்துரிமைக் பற்றிய சட்ட விழிப்புணர்வு இன்னும் நிறைய பெண்களிடம் போய் சேரவில்லை. தங்களுக்குள்ள உரிமையை பெண்கள் தெளிவாக தெரிந்து கொண்டால் மட்டுமே அதற்காக போராட முடியும்.

பெண்களுக்கான சொத்து உரிமைகளை தருவது *1956*-ல் நிறைவேற்றப்பட்ட இந்து வாரிசுச் சட்டம் தான். இந்த சட்டம் வருவதற்கு முன்பு `இந்து பெண்கள் சொத்து சட்டம்' என்று ஒன்று இருந்தது. இந்த சட்டத்தின் மூலம் பெண்களுக்கு பிறந்த வீட்டில் தங்குவதற்கான உரிமை மட்டும்தான் இருந்தது. சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. பிறந்த வீட்டிலிருந்து கொடுக்கப்பட்ட சீதனம் மட்டுமே பெண்களுக்கான சொத்தாக கருதப்பட்டது. *1956*, ஜூலை *4*-ம் தேதி நிறைவேற்றப்பட்ட `இந்து வாரிசுச் சட்டம் *1956*' பெண்களுக்கு சொத்தில் பங்கு உண்டு என்று சொன்னது. உதாரணமாக ஒரு இந்து ஆணுக்கு மனைவி, இரண்டு மகன்கள், மூன்று மகள்கள் இருக்கிறார்கள் எனில் அந்த ஆண் இறக்கும் பட்சத்தில் அவரது சொத்துக்கள் மனைவி, மகன்கள் மற்றும் மகள்களுக்கு சம பங்குகளாக கிடைக்கும். இதில் அனைவருக்கும் சம உரிமை உண்டு.

## பெண்களுக்கான உரிமைகள்

பெண்கள் தனது தந்தை வசித்து வந்த சொந்த வீட்டில் பங்கு கேட்கும் உரிமை இல்லாமல் இருந்தது. ஆனால், *2005*-ல் வந்த சட்டத் திருத்தத்தின்படி பெண்கள் தனது தந்தையின் வீட்டில் அவர் காலத்திற்குப் பிறகு பங்கு கேட்கும் உரிமை வழங்கப்பட்டது. ஒரு பெண் இறக்கும்போது அவள் பெயரில் இருக்கும் அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துகளில் அவளின் கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு சமபங்கு உண்டு. ஒருவேளை அவளது கணவனும் இறந்துவிட்டால் அந்த பெண்ணுக்கு எத்தனை மகனும் மகளும் இருக்கிறார்களோ, அத்தனை பேருக்கும் சொத்தில் சமபங்கு உண்டு. ஒரு பெண்ணுக்கு கணவனும் இல்லை, குழந்தைகளும் இல்லை எனில் அவளின் சொத்துக்கள் அனைத்தும் அவளின் பெற்றோருக்குச் செல்லும். ஒருவேளை அவளுக்கு பெற்றோரும் இல்லையெனில் அவளின் அப்பாவின் வாரிசுகளுக்கு அந்த சொத்துகள் போகும். அவர்களும் இல்லை யெனில் அம்மாவின் வாரிசுகளுக்கு சொத்து

செல்லும். கணவரோ, குழந்தையோ இல்லாத பெண்ணுக்கு அவளின் தாய் மற்றும் தந்தை மூலம் பரம்பரை சொத்து கிடைத்தால் அவளின் தந்தையின் வாரிசுகளுக்கு அந்த சொத்து கிடைக்கும். அதேபோல் கணவரோ அல்லது குழந்தையோ இல்லாத பெண்ணுக்கு, கணவர் மற்றும் மாமனார் மூலமாக சொத்து கிடைத்தால் அது அவளின் காலத்திற்குப் பிறகு கணவரின் வாரிசுகளுக்குச் செல்லும்.

பெண்ணுக்கு சீதனமாக வரும் எந்த சொத்தும் அது அவளின் தனிப்பட்ட சொத்தாகவே பார்க்கப் படும். சீதனமாக நகைகளோ, பாத்திரங்களோ, நிலமோ, வீடோ என அசையும் மற்றும் அசையா சொத்து எதுவாக இருந்தாலும் அது அவளின் தனிப்பட்ட சொத்தாகவே கருப்படும். சீதனமாக கொண்டு வந்த சொத்து அந்த பெண் கூட்டுக்குடும்பத்தில் இருந்தால்கூட அது அவளது தனிப்பட்ட சொத்துதான். அந்த சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கும் உரிமை அந்த பெண்ணுக்கு உண்டு. பெண்களுக்கு உயில் மூலமாக கிடைக்கும் சொத்தும் தனிப்பட்ட சொத்தாகவே கருதப்படும். அதனை அவள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். 2005 இந்து வாரிசு திருத்த சட்டத்தின்படி, 25.03.1989 ஆண்டுக்கு முன்பு திருமணம் செய்துகொண்ட ஒரு இந்து பெண் பூர்வீகச் சொத்தில் பாகப்பிரிவினை கோர முடியாது. அதற்குபிறகு திருமணம் செய்துகொண்ட பெண்ககள் தனது தந்தையின் பூர்வீகச் சொத்தில் பாகப்பிரிவினை கோரலாம். ஆனால், 25.03.1989 தேதிக்கு முன்பு சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தால் பாகப்பிரிவினை கோரமுடியாது. ஒருவேளை சொத்து விற்கப்படாமலோ அல்லது பாகப் பிரிவினை செய்யப்படாமல் இருந்தாலோ உரிமை கோரலாம். ஒரு ஆண் இறந்துவிட்டால் உயில் இல்லாத பட்சத்தில் அவரது தனிப்பட்ட சொத்திற்கு அவரது மனைவி, ஆண்/பெண் பிள்ளைகளுக்கு அந்த சொத்தில் தனி உரிமை உண்டு.

## இந்து திருமணச் சட்டம்

இந்து திருமணச் சட்டத்தின்படி முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது ஒரு இந்து ஆண் இரண்டாவது திருமணம் செய்து கொண்டால், அந்த திருமணம் சட்டப்படி செல்லாது. ஆனால், அதே சட்டத்தின் பிரிவு 16-ன் படி இரண்டாவது திருமணத்தின் மூலம் குழந்தை பிறந்திருந்தால் அந்த குழந்தைக்கு அதன் தந்தையின் தனிப்பட்ட சொத்தில் பங்கு உண்டு. ஆனால், பூர்வீகச் சொத்தில் எந்த பங்கையும் உரிமை கோர முடியாது. எனினும், இந்த விஷயம் உச்சநீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது. இரண்டாவது மனைவியின் குழந்தைகளுக்கு பூர்வீகச் சொத்தில் பங்கு கிடையாது என உச்சநீதிமன்றத்தில் ஒரு பெஞ்ச் சொல்லியுள்ளது. ஆனால், இன்னொரு பெஞ்ச் இதற்கு மறுக்கவே, தற்போது லார்ஜ் பெஞ்சிற்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

இந்து கூட்டு குடும்பத்தில் எப்படி ஒரு ஆண் பிறந்ததும் அவனுக்கு அந்த குடும்பத்தின் சொத்தில் உரிமை உள்ளதோ, அதேபோல் அந்த வீட்டுப் பெண்ணுக்கும் பிறக்கும்போதே சொத்தில் உரிமை உள்ளது. இந்து பெண்களுக்கு சொத்தில் இருக்கும் உரிமைகள் மட்டும்தான் இதுவரை சொல்லி இருக்கிறேன். கிறிஸ்துவ மற்றும் இஸ்லாம் மதங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இந்த சட்டங்கள் பொருந்தாது. முடிவாக, சொத்தில் பெண்களுக்கென சட்டம் வழங்கியிருக்கும் உரிமைகளை யார் தடுத்தாலும் சட்டம் மூலம் அதை தாராளமாக எதிர்கொள்ள லாம்.

நூற்றாண்டுகள் கடந்தாலும் பெண்கள் மீதான ஒடுக்கு முறைகளும் அடக்கு முறைகளும் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இதனை ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு என்று சொல்வதை விட அந்தந்த குடும்பத்தின் மூத்த பெண்களும் ஒரு வகையில் காரணம் தான் எனலாம். தாய் தனது இரண்டு குழந்தைகளையும் சமமாக பார்க்க வேண்டும். ஆண் குழந்தையை வாரிசாகவும், பெண் குழந்தையை அடுத்த வீட்டிற்கு செல்பவளாகவும் பார்க்க கூடாது. ஒரு தாய் தன் குழந்தைகளை எப்போதும் பாலின பேதம் காட்டாமல் சரிசமமாக வளர்க்கிறாளோ அப்போது தான் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். ஆசைக்கு மட்டுமல்ல ஆஸ்திக்கும் பெண் தான் என்பதற்கேற்றவாறு சொத்துரிமை யோடு, பெண்ணுரிமையும் காப்போம்.

**- கோ.பழனியம்மாள்**



# விவசாயத்தை விவசாயியை அழிக்கும் ஒப்பந்த சாகுபடி சட்டம்

தமிழக அரசானது 30. 10 .2019 அன்று ஒப்பந்த சாகுபடி சட்டத்தை இயற்றியுள்ளது.தமிழக சட்டமன்றத்தில், விவாதம் ஏதும் நடத்தாமல் ஒப்பந்த சாகுபடி சட்டம் என்ற ஒரு சட்டத்தினை குடியரசு தலைவரின் ஒப்புதல் பெற்று விட்டதாக தெரிவித்து தமிழக அரசிதழில் இதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளது. இச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இச்சட்டத்தால் நியமிக்கப்படும் ஒரு குழு விலையை நிர்ணயம் செய்யும்

இதன்படி ஒரு பயிர் பயிரிடப்படும் முன்பே அதற்கான விலையை அக்குழு ஒப்பந்த அடிப்படையில் நிர்ணயம் செய்து விடும் .சாகுபடி முடிந்ததும் அதே விலைக்கு அப்பயிர் எடுத்துக்கொள்ளப்படும் .அரசு விலை நிர்ணயம் செய்யும் கரும்பு நெல் போன்ற பயிர்களுக்கு கூட முழுமையான கொள்முதல் விலை கிடைப்பதில்லை. குறிப்பாக கரும்புக்கான பாக்கித் தொகையை கேட்டு விவசாயிகள் போராடி வருவதை நாம் தொடர்ந்து பார்க்கிறோம். இந்நிலையில் ஒரு குழு விலை நிர்ணயம் செய்யும் எனும்போது விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருளுக்கு கட்டுபடியான விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பிலிருந்து அரசு விலகிச் செல்கிறது என்பதை நாம் உணர வேண்டியுள்ளது.

டீசல்,பெட்ரோல் விலை நிர்ணயம் போல சிறு ,குறு, நடுத்தர விவசாயமும் இனி கார்பரேட் கைகளில் சென்று விடும் அபாயம் உள்ளது .விளை பொருளுக்கான விலை நிர்ணயம் செய்வது மட்டுமல்லாமல் விவசாயி என்ன பயிரை விளைவிக்க வேண்டும், விதையை யாரிடம் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட அனைத்து முடிவுகளையும் இனி கார்ப்பரேட் நிறுவனம்தான் எடுக்கும். இந்த ஒப்பந்த சாகுபடி விவசாயத்தில் ஏதாவதொரு காரணத்தால், பூச்சி தாக்குதலால், நோய் தாக்குதலால், மழையினால், வறட்சியினால், இயற்கை சீற்றத்தினால் பயிர் விளைச்சல் இல்லை என்றால் நிறுவனம் ஒதுங்கிக் கொள்ளும்.எந்த நிவாரணமும் தராது. அதற்கான உத்தரவாதம் இச்சட்டத்தில் இல்லை. லாபம் நிறுவனத்திற்கு. நஷ்டம் விவசாயிக்கு.

மேலும் ஒரு ஆபத்து என்னவெனில் பயிரிடும் விவசாயி தனது சொந்த ஊரைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த முடியாது இப்பணிகள் எல்லாம் ஒப்பந்தப்படி, குத்தகை படிதான் நடக்கும். இது மட்டுமல்ல ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி போன்றவையும் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறது. கிராமப்புற மக்களுக்கே உரிய சிறு விவசாயம் உள்ளிட்ட ஆடு, மாடு, கோழி வளர்ப்பு உள்ளிட்ட அனைத்தும் அவர்களின் கரங்களில் இருந்து பறிக்கப்பட்டு விடும். எல்லாவற்றிற்கும் ஒப்பந்தம் போட்ட நிறுவனத்தை அண்டியே வாழ வேண்டிய அவல நிலைக்கு சொந்த நாட்டிலேயே நம் விவசாயி தள்ளப்படுவான். விவசாயத்தையும் விவசாயியை யும் காப்போம். மீண்டும் வரவிருக்கும் காலனியாதிக்கத்தை முறியடிப்போம்.

- **இரா.மங்கள பாண்டியன்**

# சத்துணவு ஊழியர்களின் ஊதிய பிடித்தத்திற்கு கண்டனம் தெரிவித்து

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

தமிழக அரசு ஜனநாயகத்தை கேள்வி குறியாக்கும் தொழிற்சங்க உரிமை பறிப்பையும் தொழிற்சங்க, ஜனநாயக உரிமையின் குரல்வளையை நெறிக்கும் விதமாக...

"தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின்" சார்பாக தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்க சமூக இடைவெளியுடன் விடுமுறை நாளில் (07.07.2020 அன்று) நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்களின் சம்பளத்தை பிடித்தம் செய்ய உத்தரவிட்டதை கண்டித்தும் அந்த ஆணையை ரத்து செய்ய வலியுறுத்தியும், 07.08.20 அன்று தமிழகம் முழுவதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அனைத்து வட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் 8 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வட்ட செயலாளர் ராஜாமணி தலைமையில் மாவட்ட செயலாளர் முபாரக் அலி கண்டன உரை ஆற்றினார். வட்ட இணைச் செயலாளர் பாபு நன்றி கூறினார். திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் வட்ட செயலாளர் சேகர் தலைமையில் மாவட்ட இணைச் செயலாளர் பிச்சைவேல் கண்டன உரை ஆற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் நாராயணசாமி நன்றி கூறினார்.

பழனி தாலுகா அலுவலகத்தில் வட்ட பொருளாளர் நாகராஜன் தலைமையில் மாநில துணைத் தலைவர் மங்கலபாண்டியன் கண்டன உரை ஆற்றினார். வட்ட இணைச் செயலாளர் இளங்கோ நன்றி கூறினார். வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட இணைச் செயலாளர் ஜெயபால் கண்டன உரை ஆற்றினார். நத்தம் தாலுகா அலுவலகத்தில் தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜான் பாஸ்டின் டல்லஸ் கண்டன உரை ஆற்றினார். நத்தம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வட்ட தலைவர் பச்சை முத்து கண்டன உரை ஆற்றினார். நிலக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் வட்ட தலைவர் முருகேசன் தலைமையில் வருவாய் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் பாபு கண்டன உரை ஆற்றினார். ஆத்தூர் வட்டக்கிளை சார்பில் ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மணிக்காளை தலைமையில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் குப்புசாமி கண்டன உரை ஆற்றினார்.

### நாகப்பட்டினம்

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வட்டத் தலைவர் எம்.மேகநாதன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் விளக்கவுரையாற்றினார. சத்துணவு ஊழியர் சங்க நாகை ஒன்றியச் செயலாளர் சி.கலியபெருமாள், திருமருகல் ஒன்றியச் செயலாளர் சித்திரா, கிராம சுகாதார செவிலியர் சங்க மாநில பொதுச்செயலாளர் பா.ராணி ஆகியோர் கண்டன உரையாற்றினார். மாவட்டத் தலைவர் து.இளவரசன் நிறைவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் கே.இராஜு நன்றியுரையாற்றினார்.





தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்க பொதுச்செயலாளர் அ.தி.அன்பழகன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில தலைவர் ப.அந்துவன்சேரல், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## தருமபுரி

மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சேகர் தலைமை வகித்தார். நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் சந்திரன் தலைமையிலும், பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட செயலாளர் பெருமாள் தலைமையிலும், காரிமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் முருகேசன் தலைமையில்நடைபெற்றது.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் சண்முகம் தலைமையிலும், அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிவமணி தலைமையிலும் பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட இணை செயலாளர் குணசேகரன் தலைமையிலும், அரூர், வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் சுதாகர் தலைமையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட தலைவர் சுருளிநாதன், மாவட்ட பொருளாளர் புகழேந்தி, மாவட்ட இணை செயலாளர் காவேரி. தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் நெடுஞ்செழியன். தமிழ்நாடு பொது நூலகத்துறை ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் பிரபாகரன், பாப்பிரெட்டிப்பட்டி வட்ட தலைவர் கிருஷ்ணமூர்த்தி, காரிமங்கலம் வட்ட செயலாளர் முனிரத்தினம், அரூர் வட்ட செயலாளர் சி.அழகிரி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

அனைத்து பகுதிகளில்நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பெண்கள் உட்பட அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள், சத்துணவு சங்க ஊழியர்கள் பங்கேற்றனர்.

## திருவள்ளூர்



மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டக்கிளை, திருத்தணி வட்டக்கிளை, ஊத்துக்கோட்டை வட்டக்கிளை ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருப்பூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்ட கிளை சார்பாக கொரோனா நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும் ஆர்சானிக் ஆல்பம் 30 சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகள் மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம், கருவூலம், நெடுஞ்சாலைத்துறை, ஆகிய அலுவலகத்தில் 28.08.2020 அன்று காலை 11-00 மணி முதல் 03-30 மணி வரை வட்டக்கிளை செயலாளர் எஸ்,முருகசாமி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர், ராஜேஸ்வரி, தோட்டக்கலை உதவி இயக்குநர் திவ்யா மற்றும் துணை வட்டாட்சியர் பொன்ராஜ், உதவி கருவூலர், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பாளர் முருகனாந்தம் ஆகியோர் வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் எம்.பாலசுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றினார். வட்டக் கிளை தலைவர், முகமது இசாக், பொருளாளர் என்.சிவகுமார், துறை சங்க நிர்வாகிகள் பாலு, வேளாண்மைத்துறை ராமேஷ், ஆறுமுகம் பழனிச்சாமி நெடுஞ்சாலைத்துறை மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் 200 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்

# 10.08.2020 அன்று தமிழகம் தழுவிய தேச பாதுகாப்பு நாள் ஆர்ப்பாட்டம்

பொதுத்துறை நிறுவனங்களை விற்கக்கூடாது, தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்தக்கூடாது, ஊழியர், மக்கள் விரோத கொள்கைகளை கைவிட கோரி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு முடிவின்படியும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவிற்கிணங்கவும் 10.08.2020 அன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக

## கிருட்டினகிரி

மாவட்ட மையத்தின் சார்பாக வட்டாட்சியர் அலுவலக வளாகம் எதிரில் "தேச பாதுகாப்பு நாள்" ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். கோரிக்கைகளை ஆதரித்து ஜி.வெங்கடேசன் (நகராட்சி, மாநகராட்சி ஊழியர் சங்கம்), ஆர்.எம்.மஞ்சுளா (சத்துணவு ஊழியர் சங்கம்), கே.ஜெகதாம்பிகா (மகளிர் துணைக்குழு அமைப்பாளர்), கே. சப்தமோகன் (சூளகிரி வட்டக் கிளை தலைவர்), என்.அன்பழகன் (தேன்கனிக்கோட்டை வட்டக் கிளை தலைவர்) ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் சி.கல்யாணசுந்தரம் நன்றி கூறி ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் 16 பெண் ஊழியர் உட்பட 62 பேர் கலந்துகொண்டனர்.

## நாகப்பட்டினம்

வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் விளக்கவுரையாற்றினார்.



தமிழ்நாடு வருவாய்துறை கிராம உதவியாளர் சங்க வட்டத் தலைவர் வி.கலியபெருமாள், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, இந்திய தொழிற்சங்க மையம் சு.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் கே.இராஜூ நன்றியுரையாற்றினார்.

## திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தில் 8 இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 24 பெண்கள் உட்பட 235 ஊழியர்கள் பங்கேற்றனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு டி.எஸ்.அசோக் தலைமையிலும், நன்னிலத்தில் டி.கருணாமூர்த்தி தலைமையிலும், குடவாசல் வட்டத்தில் வி.தெட்சிணா மூர்த்தி தலைமையிலும், வலங்கைமான் வட்டத்தில் எஸ்.ரவி தலைமையிலும், மன்னார்குடியில் ஏ.வி.சுப்பிரமணியன் தலைமையிலும், திருத்துறைப்பூண்டியில் ஜி.பன்னீர்செல்வம் தலைமையிலும், நீடாமங்கலத்தில் வி.சின்னையன் தலைமையிலும்,



கூத்தாநல்லூரில் க.இளமாறன் தலைமையிலும் நடைபெற்றது.

மேற்கண்ட ஆர்ப்பாட்டங்களில் மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம், ஆர்.ராஜசேகரன், எஸ்.மகேஷ், பொன்முடி, முரளி, டி.சுகுமார், பா.செந்தில்நாதன், சி.பிரகாஷ், டி.மணிவண்ணன், டி.தமிழ்சுமர், எஸ்.ஆறுமுகம், முருகையன், எஸ்.செங்குட்டுவன், குலோத்துங்கள், கலையரசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு பி.கமலக்கண்ணன், பி.புஷ்பராஜ், கே.சுப்பிரமணியன், ராமமூர்த்தி, பி.முத்துக்குமார், ஜி.தருமையன், ராஜா, கலையரசன் ஆகியோர் நன்றி கூறி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தனர்.

# வைக்கம் வீரர் பெரியார்



ஏன் எப்படி எதற்கு எதனால்
வினாக்கள் தொடுத்து விடையது கண்டு
தான் முடிவு எடுத்தலே அறிவு
பரப்பிய பெரியார் புகுத்திய பகுத்தறிவு

சிக்கன வாழ்வில் உறுதியாய் நின்றவர்
மாற்றாரையும் மதித்த நாகரிகம் மிக்கவர்
எக்கணமும் எழுத்தும் பேச்சும் எனவே
இடைவிடாது இறுதி மூச்சுவரை இயங்கியவர்

மக்களின் வாழ்வை மறிக்கும் சாதிமதம்
எதிர்த்த பகுத்தறிவுப் பகலவன் பெரியார்
பெண்களின் உரிமையைக் கண்ணாய்ப் போற்றி
ஓயாமல் பரபரப்புரை செய்தவர் பெரியார்

விண்ணில் சொர்க்கம் பொய்யென் றுரைத்து
சோவியத் மண்ணில் நேரில் கண்டதை
மண்ணில் சொர்க்கம் சமத்துவ சமூகம்
என்றே போற்றிய பெருந்தகை பெரியார்

ஆலய நுழைவுப் போரினை நடத்தி
தீண்டாமைக் கெதிராய் ஓங்கி முழங்கி
ஆலயம் வழிபடும் உரிமையைப் பொதுவாய்
வென்ற வைக்கம் வீரர் பெரியார்

பெரியார் பரப்பிய சீர்திருத்தக் கருத்துக்கள்
மானுடம் பற்ற வேண்டிய முத்துக்கள்
பெரியாரைக் கற்றலும் பின்பற்றி நிற்றலும்
மானுட வாழ்வை நெறிப்படுத்தும் நன்றாய்

*(தந்தை பெரியார் பிறந்த நாள் செப்டம்பர் 15)*

- **பெரணமல்லூர் சேகரன்**

## விருதுநகர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் விருதுநகர் மாவட்ட மையம் சார்பிலும் தமிழ்நாடு அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கமும் இணைத்து திருவில்லிபுத்தூர் கிளையில், வட்டக் கிளை தலைவர் எம்.திருமூர்த்தி தலைமையில் திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் சரவணன் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து துவங்கிவைத்து, தொடர்ந்து நிலஅளவைத்துறை, கருவூலக் கணத்துறை அலுவலகம், புள்ளியியல் துறை, வட்டாட்சியர் அலுவலகம், கல்வித்துறை, நகராட்சி, முன்னாள் படைவீரர் நலத்துறை , ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கூட்டுறவுத்துறை, வணிகவரி, தொழிலாளர் நலத்துறை, வனத்துறை, நெடுஞ்சாலைத்துறை NHஅலுவலகம், நெடுஞ்சாலைத்துறை மற்றும் கட்டுமானம் பாரமரிப்பு, கால்நடை பராமரிப்பு துறை, பொதுப்பணித்துறை, வட்டார கல்வி அலுவலகம், பத்திரப்பதிவு ஆகிய அலுவலகங்களில் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஹோமியோபதி மாத்திரை இன்று 17.08.2020 காலை 11 மணி அளவில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருவில்லிபுத்தூர் வட்டக் கிளை செயலாளர் தோழர் ப.திருப்பதிராஜ் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் தலைவர் இளையராஜா தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கா.கருப்பையா, அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கோ.சுந்தரமூர்த்தி, திருவில்லிபுத்தூர் அனைத்து துறை ஓய்வூதியர் வட்ட கிளை செயலாளர் பிலாவடியான், வட்டக்கிளை துணைத் தலைவர் சீனிவாசன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

# நெகிழ்ச்சியுடன் நடைபெற்ற...

# எழுச்சி நிகழ்ச்சி!




" உடல் மாணவர்களுக்கு...

உயிர் மக்களுக்கு"

என்று வாழ்ந்து, மறைந்து, இன்றும் அனைவரின் இதயத்திலும் குடிகொண்டு வாழ்ந்துவரும் ...

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முன்னாள் தேசியத் தலைவரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளருமான ...

தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் கருத்தரங்கம் மற்றும் " இலட்சத்தில் ஒருவன்; இலட்சியத் தலைவன் " என்ற நூல் வெளியீட்டு நிகழ்வும்...

இன்று ( 08.08.20 ) தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில், நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் கொரோனா நோய்த்தொற்று காலத்தை கருத்தில்கொண்டு முகக் கவசத்துடன், சமூக இடைவெளிவிட்டு அமர்ந்து நடைபெற்றது.

அஞ்சலியோடு நிகழ்ச்சி துவங்கியது.

மாவட்டத் தலைவர் தோழர் து.இளவரசன் தலைமை தாங்கினார்.

நாகை வட்டத் தலைவர் தோழர் எம்.மேகநாதன் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலச் செயலாளரும், கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவருமான தோழர் எம்.சௌந்தர்ராஜன் துவக்கவுரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர் தோழர் சு.சிவகுமார் அஞ்சலி உரையாற்றினார்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய செயற்குழு உறுப்பினரும், நாகை மாவட்டச் செயலாளரும், நூல் பதிப்பு ஆசிரியருமான தோழர் அ.தி.அன்பழகன் நூல் குறித்தும், இந்த நூலில் பல்வேறு தலைவர்கள் தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களுடன் நடைபெற்ற நிகழ்வுகள், அவரின் குணநலன்கள், அவரிடமிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள் குறித்து எழுதியிருந்ததில் ஒரு சிலவற்றை குறிப்பிட்டு நூல் அறிமுக உரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் தோழர்

எஸ்.கோதண்டபாணி, திருவாரூர் மாவட்டச் செயலாளர் தோழர் சோமு, தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்க மாநிலச் பொருளாளர் தோழர் நா.வினோத்குமார் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்க மாநில பொதுச்செயலாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினருமான தோழர் பா.ராணி " பெண்ணியமும் தோழர் ஆர்.எம்.எஸ்ஸும் " என்ற தலைப்பில் தோழர் ஆர்.எம்.எஸ் பெண்ணியம் குறித்து கொண்டிருந்த கருத்துக்கள், அவற்றை பொதுவெளியிலும், தம் குடும்பத்திலும் அமல்படுத்திய பாங்கு என்பது குறித்தும் தற்காலத்தில் பெண்ணியத்தின் தேவை குறித்தும் எதார்த்தமாக பேசி ஆழமான கருத்துக்களை சபைக்கு தெரிவித்தார்.

தமிழ்நாடு நகராட்சி நிர்வாக ஆணையரக அனைத்து ஊழியர்கள் சங்க மாநிலத் தலைவர், தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களோடு இறுதிவரை தொடர்ந்து பயணித்த தோழர் கி.இரகுராமன் " இறுதிவரை உறுதியாக " என்ற தலைப்பில் தோழர் ஆர்.எம்.எஸ் அவர்கள் சிறுவயதிலேயே முற்போக்கு எண்ணத்துடன் வாழத் துவங்கியது முதல் இறுதிவரை நேர்மையாக, தான் கொண்ட கொள்கையில் உறுதியாக, மிகவும் எளிமையாக வாழ்த்து குறித்து பல்வேறு சம்பவங்களை உதாரணமாக காட்டியும், அவதூறு செய்பவர்களை புறந்தள்ளி செயல்பட்டது குறித்து விவரித்ததோடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இன்று சந்தித்து வரும் சவால்களின் மூல காரணங்களையும் கோடிட்டு காட்டி, ஓர் அற்புதமான உரை நிகழ்த்தினார்.

தோழர் அ.தி.அன்பழகன் அவர்கள் தோழர் ஆர்.எம்.எஸ் குறித்து வெளியிடும் இரண்டாவது நூலான " இலட்சியத் தலைவன்; இலட்சத்தில் ஒருவன் " என்ற நூலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்கள் வெளியிட, தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்க மாநிலப் பொருளாளர் தோழர் நா.வினோத்குமார் முதற் பிரதியை பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் தோழர் மு.அன்பரசு " வீழ்வேன் என நினைத்தாயோ ? " என்ற தலைப்பில் தோழர் ஆர்.எம்.எஸ் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள், அவற்றை நேர்மையாக எதிர்கொண்ட விதம், இன்றைக்கு கொரோனா நோய்த்தொற்றை காரணம் காட்டி மத்திய, மாநில அரசுகள் எடுத்துவரும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், அதனை எதிர்கொள்ள, நாம் வகுக்க வேண்டிய வியூகங்கள், சவால்கள் உள்ளிட்டவற்றை விவரித்ததோடு தோழர் ஆர்.எம்.எஸ் கண்ணுக்குத் தெரிந்த நோய்த்தொற்றோடு எப்படி போராடி வெற்றி கண்டார். வீழ்ந்து விடுவார் என்று பலர் கண்ட கனவு எப்படி பொய்த்துப் போனது என்பதை எடுத்துக் கூறிவிட்டு, " தோழர் ஆர்.எம்.எஸை எங்கே தேட வேண்டும் " என்பது குறித்த உணர்ச்சிப் பெருக்குடன் கூடிய ஓர் சிறந்த கவிதையை வாசித்து நிறைவுரையாற்றினார்.

தமிழ்நாடு புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டம் பொருளாளருமான தோழர் ப.அந்துவன்சேரல் மறைந்தும் மக்கள் மனதில் வாழ்பவர்கள் குறித்த வரலாற்று பதிவின் தேவைகள் குறித்து எடுத்துக்கூறி நன்றியுரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் மாவட்டப் பொருளாளர் ரவிச்சந்திரன், திருவாரூர் மாவட்டத் தலைவர் இரா மாணிக்கம், மற்றும் நாகை மாவட்டத்தின் பல்வேறு சங்கத் தலைவர்கள், அரசு ஊழியர் சங்க வட்ட, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

கொரோனா நோய்த்தொற்று துவங்கியது முதல் இதுவரை எந்தவித அரங்க நிகழ்வுகளும் நடைபெறாமல் இருந்த நிலையில், முதன் முதலாக நாகை மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று, இ-பாஸ் வாங்கி, இந்த நிகழ்வில் பங்கேற்க சென்னையிலிருந்து வந்த தோழர்கள் மு.அன்பரசு, கி.இரகுராமன் மற்றும் நா.வினோத்குமார் ஆகியோரின் முகங்களை நேரில் கண்ட தோழர்கள் மிகவும் நெகிழ்ச்சியடைந்தனர். அதேபோல் அவர்களும் நேரில் தோழர்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையத்திற்கு நன்றியை தெரிவித்தனர்.

அனைவரையும் இணைக்கும் மையப் புள்ளியாக தோழர் ஆர்.எம்.எஸ் இப்போதும் திகழ்கிறார், எப்போதும் திகழ்வார். ■

# நெஞ்சம் மறப்பதில்லை.....

இரண்டு ஆண்டுகள் கடந்துபோனாலும் சூரியன் மறைந்த பிறகு அடிவானத்தில் தேங்கி நிற்கும் வெளிச்சம் போல நினைவுகள் கலைய மறுக்கிறது.....

## 2018 - செப்டம்பர் - 05 டெல்லி பேரணி.....

PFRDA -வை கலைக்க வேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்பட்ட அனைவரையும் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியமுறையில் சேர்க்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும், ஒப்பந்த, தினக்கூலி, வெளி முகமை மூலம் அரசுத்துறைகளில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களையும் வரன்முறைப்படுத்த வேண்டும், அனைத்து காலிப்பணியிடங்களையும் முறையான ஊதிய விகிதத்தில் ஊழியர்களைக் கொண்டு நிரப்பிட வேண்டும் என்பன உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி புதுடெல்லியில் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற பேரணியில் கலந்துகொள்ள கிருட்டினகிரி மாவட்டத்திலிருந்து மாவட்ட பொருளாளர் தோழர் V.தேவராஜ் தலைமையில் 21 தோழர்கள் சென்றனர்.

கிருட்டினகிரி மாவட்டம், சூளகிரி வட்டக் கிளை சார்ந்த புக்கசாகரம் என்ற குக்கிராமத்தைச் சார்ந்த சத்துணவு அமைப்பாளர் தோழர் B.R.வெங்கடேசப்பா அவர்களும் டெல்லி பேரணிக்குச் சென்ற குழுவில், மத்திய ஆட்சியாளர்களின் காதுகளுக்கு அருகில் கோரிக்கைகளை முழங்க வேண்டும் என்று போராட்ட உணர்வோடு சென்றார்.

ஆனால், போராட்ட களத்தில் கால்வைப்பதற்கு முன்பே தோழர் B.R.வெங்கடேசப்பா அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டு டெல்லி மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டது.

அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் அனைவரும் அவரை அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத் தலைவர்களின் வழிகாட்டுதலோடு மருத்துவமனையில் சேர்த்து உயர்தர சிகிச்சையளித்து எப்படியாவது அவரை காப்பாற்றிவிட வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்கள். இரவு முழுவதும் மருத்துவமனையிலேயே மாநில நிர்வாகிகள்- நமது மாவட்ட நிர்வாகிகள் தூக்கமின்றி காத்திருந்து எப்படியாவது மரணத்தின் பிடியிலிருந்து மீட்டெடுத்துவிட வேண்டும் என்று முயற்சித்தும் முடியவில்லை.

வரைபடத்தில் தேடித் துருவி கண்டுபிடித்தால் மட்டுமே தெரியும் புக்கசாகரம் கிராமத்தில் பிறந்து, வளர்ந்து இந்தியாவின் தலைநகர் புதுடெல்லியில் - போராட சென்று களம் காணாமலேயே காலமாகிவிட்டார் தோழர் B.R.வெங்கடேசப்பா .

கிருட்டினகிரி மாவட்ட அரசு ஊழியர் இயக்க வரலாற்றில் என்றும் அவர் பெயர் நிலைத்திருக்கும்.

மருத்துவ சிகிச்சைக்கான மொத்த செலவினத் தையும் மாநில மையம் ஏற்றுக்கொண்டதும்......

அவரது உடலை விமானம் மூலம் பெங்களூரு வரை அனுப்ப ஏற்பாடு செய்து மாவட்ட நிர்வாகிகளுடன் ஒரு மாநில நிர்வாகியையும் அனுப்பியது....

அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் உணவின்றி, உறக்கமின்றி சக தோழனுக்கு செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றிய தும்.... என்றென்றும் நினைவில் நிற்கும்.

அடுத்த நாள் அதிகாலையில் கிருட்டினகிரி மாவட்ட நிர்வாகிகள் பெங்களூரு விமான நிலையம் சென்று அவரது உடலை பெற்றுக்கொண்டு அவரது சொந்த ஊருக்கு கொண்டு சென்றோம்.

அஞ்சலிக்காக வைக்கப்பட்ட அவரது உடலுக்கு சுற்றுவட்டாரத்திலிருந்து ஆயிரக்

கணக்கான பொதுமக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியதும், அவர் சத்துணவு அமைப்பாளராக பணியாற்றிய புக்கசாகரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டு ஆசிரியர்களும், மாணவர்களும் சீருடை அணிந்து வாத்தியக் கருவிகளை இசைத்து வரிசையாக வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தியதும் பல மாணவிகள் கண்ணீர்விட்டு அழுததும் நினைவில் நீங்கா காட்சிகளாகும்.

"அவரை நாங்கள் சத்துணவு அமைப்பாளராக பார்க்கவில்லை-அப்பாவாகப் பார்த் தோம். எங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் அவரது இருசக்கர வாகனத்தில் எங்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார். அவரை இனி பார்க்கவே முடியாதே...." என்று சொல்லி மாணவிகள் கண்ணீர் வடித்த காட்சிகள் மறக்க முடியாது.

அப்படிப்பட்ட அருமை தோழரின் மகள் திருமதி V.பவானி அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் முயற்சியால் ஓராண்டிலேயே கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளராக பணி ஆணை பெற்று B.R.வெங்கடேசப்பா பணிபுரிந்த அதே பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்.



இதுவும் நம் சங்கத்தின் சாதனை என......மனது லேசாகி மிதக்கத் தொடங்கி..... நெஞ்சம் மறப்பதில்லை.....

**- ஆர்.நடராஜன்**

## வாசகர் கடிதம்

இம்மாத அரசு ஊழியர் இதழில் தங்களின் காலத்தை வென்ற தோழர் ஆர்.எம்.எஸ். மறக்க முடியாத சில நினைவுகள் நினைவுக் குறிப்புகள் கட்டுரை படித்தேன் மிக மிக அருமையாக இருந்தது. ஒவ்வொரு வரிகளும் எதிர்கால சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவும், திட்டமிடலுக்கும் பயனுள்ளதாக இருக்கும். என்னை போன்றவர்களுக்கு மிக பயனுள்ளதாக இருந்தது இந்த நினைவுகள். என்றும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு அருமையான கட்டுரை. அரசு ஊழியர் போராட்ட களத்தில் ஈடுபாடும் அனைவரும் படிக்க வேண்டியது.

முனைவர் **கா.பால் பாண்டி**,
பெரம்பலூர் மாவட்டம்.

# தோழர் எம்.ஆர்.அப்பன் நினைவு நாள் கூட்டம்




*31.08.2020* அன்று வட / தென் சென்னை மாவட்டங்கள் சார்பாக தோழர் எம். ஆர். அப்பன் நினைவு நாள் கூட்டம் டானியல் ஜெய்சிங் தலைமையில் நடைபெற்றது.


இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில முன்னாள் துணைத் தலைவர் கே.எம்.தியாகராஜன், மாநில முன்னாள் துணைத் தலைவர் பி. எஸ். அப்பர், முன்னாள் பொதுச் செயலாளர் இரா. சீனிவாசன், மாநில தலைவர் மு. அன்பரசு ஆகியோர் உரையாற்றினர். வட, தென் சென்னை மாவட்ட நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

# ஓய்வறியா உழைப்பாளிக்கு செவ்வணக்கம்

அரசு ஊழியர் சங்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான தோழர் டி.லட்சுமணன் கொடிய நோய் தொற்றிற்கு பலியானார். ஓய்வறியா உழைப்பாளியான அவரை முதுமை இறுதிவரை ஒன்றும் செய்துவிட முடியவில்லை. முதுமையை ஓரங்கட்டி தனது 83 வயது வரையில் பொதுவாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, களப்பணியாற்றி தன்நிகரற்ற தலைவராக விளங்கினார்.

அரசுப் பணியில் கால்நடை ஆய்வாளராக சேர்ந்து, பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு 10 ஆண்டுகள் முன்பே விருப்ப ஓய்வு பெற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர். மறைந்த, மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் பி.ஆர்.பரமேஸ்வரன் அவர்களின் வழிகாட்டுதலோடு பயணத்தை துவக்கிய டி.எல். கட்சியில், மாவட்டச் செயலாளர், மாநிலச் செயற்குழு உறுப்பினர், மாநிலக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர். மறைந்த, மார்க்சிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் ஏ.நல்லசிவன். அவர்களுடன் இணைந்து கட்சிப்பணியில் ஒரு புதிய தாக்கத்தை உருவாக்கியவர்.

இலக்கியங்களை படிப்பதிலும், பிறருடன் அதுகுறித்து விவாதிப்பதிலும் ஆர்வமுடையவர். புதிதாக ஒரு புத்தகம் வெளியிடப்பட்டால் அதை படித்து விட்டாயா என்று வினவும் அவரிடம் படித்துவிட்டேன் என்று சும்மா சொல்லிவிட முடியாது. என்ன படித்தாய் அதில் என்ன உனக்கு புரிந்தது என விவாதிக்க ஆரம்பித்துவிடுவார். புத்தகங்கள் படிக்க நேரமில்லை என்று அவரிடம் சொல்ல முடியாது. காலையில் எத்தனை மணிக்கு எழுகிறாய் என கேட்டு ஒரு மணிநேரம் முன்னதாக எழுந்து புத்தகத்தை படி என்பார். சொல்வது மட்டுமல்ல என்ன பணியிருந்தாலும், இரவு எந்த நேரம் உறங்க சென்றிருந்தாலும் அதிகாலை எழுந்து குளித்துவிட்டு கையில் ஒரு புத்தகத்தை



வைத்துக்கொண்டு படித்துக்கொண்டு இருப்பார். படிப்பது மட்டுமல்ல எழுதுவதிலும் திறமை மிக்கவர் தோழர் டி.எல். தீக்கதிரில் அவருடைய கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்ததும் உண்டு. 1980ஆம் ஆண்டு இந்திய அரசு முதன் முதலாக உலக வங்கியிடம் கடன் வாங்கிய போது "அதோ ஒரு ஆபத்து' என்ற தலைப்பில் கடன் வாங்குவதால் மக்களின் உரிமைகள் எவ்வாறு அடகு வைக்கப்படுகின்றன என்பதை முன்னுணர்ந்து எழுதியவர். 40 ஆண்டுகள் கழித்து இன்று அந்த புத்தகத்தை எடுத்து படித்தால் அவரது நுண்ணிய அறிவாற்றலை புரிந்துகொள்ள முடியும்.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், அரசு ஊழியர் இயக்கங்களுக்கு தொடர்ச்சியாக வழிகாட்டி வந்தவர். 1972ஆம் ஆண்டு நடைபெற்ற தொழிற்பயிற்சி பயிற்றுனர்கள் சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டம், 1978ஆம் ஆண்டு நடைபெற்ற அரசுஊழியர்கள் வேலை நிறுத்தம், 1988ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டம், 1992 அரசு ஊழியர் போராட்டம், 2002ஆம் ஆண்டு நடைபெற்ற அரசுஊழியர் ஆசிரியர் போராட்டம் ஆகிய போராட்டங்களில் தோழர் டி.எல் அவர்களின் வழிகாட்டுதல் மகத்தானது. 2003ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டத்திற்கு வழிகாட்டியாக விளங்கினார். அரசு ஊழியர் சங்கமாக இருந்தாலும் ஆசிரியர் சங்கமாக இருந்தாலும் தோழர் டி.எல்

அவர்களின் வழிகாட்டுதல் நிச்சயம் அங்கு இருக்கும். அரசு ஊழியர் சங்கத்தை துவக்குவதற்கு காரணமாயிருந்தவர்களில் ஒருவர். அரசுஊழியர் சங்கம் துவக்கப்படுவதற்கு முன்பாக, 1982ல் வெளிவந்த அரசு ஊழியர் மாத இதழின் ஆசிரியராக, வெளியிடுபவராக இருந்து திறம்பட செயல்பட்டு புத்தகத்தை தொடர்ந்து வெளி கொண்டு வந்தவர். தோழர் எம்.ஆர்.அப்பன் அவர்களின் நெருங்கிய சகாவான டி.எல் அவருடன் இணைந்து பல்வேறு போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர், அகில இந்திய துணைத் தலைவராக பொறுப்பேற்று பணியாற்றியவர்.

அரசு ஊழியர் சமூகத்தில் அடி மட்டத்தில் உள்ள கிராம உதவியாளர்களுக்கு சம்பளம் பற்றாக்குறை மட்டும் பிரச்சனை இல்லை தீண்டாமையும் கூடத்தான் என்பதை உணர்ந்து அவர்களுக்கென சங்கம் அமைத்து, வழிகாட்டி, மூன்று முறை வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தி வளைந்திருந்த அவர்களின் முதுகெலும்பை நிமிர்த்தி மனிதனாக மாற்றியவர் தோழர் டி.லட்சுமணன் என்றால் அது மிகையாகாது. கிராம உதவியாளர்களுக்காக முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் என்.சங்கரய்யா அவர்களுடன் அன்றைய முதல்வரை நேரில் சந்தித்து பழிவாங்கு நடவடிக்கையிலிருந்து மீட்டவர் தோழர் டி.எல். அதேபோல் சத்துணவு ஊழியர்களுக்கு சமூக விரோதிகளால் அச்சுறுத்தல் வந்தபோது அவர்களை பாதுகாத்திட சத்துணவு ஊழியர் சங்கத்திற்கு அரணாக நின்று வழிகாட்டியவர் தோழர் டி.எல்.

பலவகையான மக்களுடன் அன்றாடம் தொடர்பு உள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதில் தீர்க்கமாக முடிவெடுத்து, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மூலமாக 'வேலைக் கலாச்சாரம்' என்ற தலைப்பில் மாவட்டங்கள் தோறும் கருத்தரங்குகள் நடத்தி தானும் அதில் பங்கேற்று உரையாற்றியவர். நடப்பில் உள்ள சட்டங்கள் மூலம் நம்மை நாடிவரும் ஏழை எளிய மக்களுக்கு நம்மால் உதவ முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கி ஊழியர்களின் உணர்வு மட்டத்தை உயர்த்தியவர். அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாட்டில், முதல்வர் அமர்ந்திருக்கும் நேரத்தில், அரசு ஊழியர்கள், ஊழலற்ற நிர்வாகத்தை வழங்குவோம் லஞ்சம் வங்க மாட்டோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர்.

முதுமை அடைந்தாலும், தனக்கிட்ட பணியினை தட்டாமல் நிறைவேற்றியவர், மாற்றுத் திறனாளிகள் சங்கத்தை தமிழ்நாட்டில் உருவாக்கிட மாவட்டந்தோறும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அதை வளர்த்தெடுத்தவர். அவர்களின் உரிமைகளுக்காக போராடி வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கியவர் மரணம் தன்னை நெருங்கியபோதும், ஓய்வறியாமல், தனது இறுதி மூச்சுவரை, தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழுவின் பொறுப்பை ஏற்று பம்பரமாக சுழன்று அவ்வியக்கத்தை உருவாக்கிட உதவியவர். சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியவர். மாவட்டங்களுக்கு அவர் வருகிறார் என்றாலே அவரைக் கண்டு செல்ல, குறைகளை சொல்ல சிறுபான்மை மக்கள் திரண்டு வருவர். எளிமையின் சிகரமாய், அறிவின் பெட்டகமாய், ஓய்வறியா உழைப்பாளியாய் திகழந்த டி.எல். அரசு ஊழியர் சங்க வரலாற்றில் மட்டுமல்ல பொதுவுடமை இயக்க வரலாற்றிலும் நீங்கா இடம் பெற்றவர் ஆவார். அவரிடத்தில் ஓய்வு இல்லை, நேரம் இல்லை. என்று கூறினால் நீ நிரந்தரமாக தூங்கும்போது உனக்கு போதுமான ஓய்வு கிடைக்கும் என்று கூறி தட்டிகொடுப்பார். ஊக்குவிப்பார்.

ஓய்வறியா நீ ஓய்வு எடுக்க மீளா துயில் கொண்டாயோ.... அன்புத் தோழனே செவ்வணக்கம்.

**- க.ராஜ்குமார்**

# டி.எல் எனும் ஈரெழுத்துச் சொல்

*டி.எல்.*
ஈரெழுத்துச் சொல்லுக்கு
இன்று இரங்கல்
அதில்
நன்றி எனும்
மூவெழுத்துச் சொல்
உள்ளடங்கல்

அரசு ஊழியம் என்னவோ
கால்நடைத் துறையில் தான்
முரசு கொட்டியதென்னவோ
அனைத்து ஊழியர்களுக்காகவும்தான்

சங்கத் தலைமையின் சோரம்
சிங்க நிகராய் எதிர்த்த வீரம்
சங்கம் தனியே கண்ட விதம்
அகப் புறச் சூழலின் பதம்

ஊன்றிய விதை
தோன்றும் விருட்சம்
என்றும் நிலைக்கும்
குன்றாப் புகழ் மலைக்கும்

அரசுப் பணிக்கு முற்றுப்புள்ளி
சுரண்டலுக்கு வைக்கவே கொள்ளி
பொதுவுடைமை இயக்கத்தை அள்ளியது
புதுப்பாதை மின்னியது

வழிகாட்டுதலில்
விழிநிகர் பொறுப்பு
கழிபெரும் அக்கறை இருப்பு
இதுவே டி.எல். சிறப்பு

படைப்புகள் எனின்
மேலெழுந்த வாரியாக அல்ல
ஆழ அகல உழும் அழகு
தோழர் டி.எல்.லிடம் பழகு

வயது மூப்பிலும் இயக்கம்
சிறுபான்மையினர் நலனுக்கான முழக்கம்

மாற்றம் ஒன்றே மாறாதது
மாற்றுத் திறனாளிகளுக்கும்கூட
போற்றும் வழிகாட்டலைப் பற்றி
மாற்றுத் திறனாளிகளுக்கு வெற்றி

நம்ப முடியாத மரணம்
கொரோனா கால கொடூரம்

இரங்கலும் அஞ்சலியும்
அரங்கங்களின் வழக்கம்

அவரிடம் கற்றல்
அதன்படி நிற்றல்
இவையே போற்றல்

போய் வாருங்கள் டி.எல்.
பின் வருவோம் நாங்கள்
உங்கள் கனவான
எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்கும்
மண்ணின் சொர்க்கவாசல் திறக்கும்
நங்கூரமிடும் நம்பிக்கையுடன்...

- ***பெரணமல்லூர் சேகரன்***

**கொரோனாவிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள தனி மனித இடைவெளியை பின்பற்றுவோம்!**

**முகக் கவசம் அணிவோம்!**

# சுதந்திர இந்தியாவின் நிலை அன்றும் இன்றும்





இந்த பூமி அழகானது. இதில் உள்ள காடுகள், மலைகள் அழகானவை. ஓய்வில்லாமல் ஓடும் நதிகளும், அவை சேரும் சமுத்திரங்களும் அழகானவை. நீர்நிலைகளில் வாழும் கோடிக்கணக்கான உயிரினங்கள் அழகானவை. ஆம், ஒட்டுமொத்த இயற்கையும் அழகானவை. இவற்றை ஒட்டி வாழும் மனித குலத்தின் வாழ்க்கை அழகானது. இந்த இனிய வாழ்க்கைக்கு கலக்கம் தர வந்ததோ இந்த கொடிய கொரோனா.

1947 அன்று சுதந்திரம் பெற்று கால்தடம் பதித்த இந்தியா

நம் நாடு சுதந்திரம் அடைந்து 74 ஆண்டுகள் ஆகிறது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது. முக்கால் நூற்றாண்டு சுதந்திரம் இது வரலாற்றில் மிக முக்கியமான தருணம். பல ஆண்டுகளாக கட்டப்பட்டிருந்த அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்தது ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொன்னான நாள் ஆகஸ்ட் 15. சுதந்திரம் சும்மா வந்தது அல்ல. பல லட்சக்கணக்கான மக்களின் உயிர்த் தியாகங்களும், வலிகளும், வேதனைகளும் இருக்கின்றது. இந்தியாவில் வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் கிழக்கிந்திய கம்பெனி மூலம் தாங்கள் சாம்ராஜ்யத்தை 1757ஆம் ஆண்டு கட்டமைத்தனர். இந்நிறுவனம் சுமார் 100 ஆண்டுகள் இந்தியாவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இந்நிலையில் 1857 முதல் இந்திய சுதந்திரப்போர் வெடித்தது. ஆங்கிலேயர்களிட மிருந்து சுதந்திரம் வேண்டும் என்ற எண்ணம் இந்த சிப்பாய் புரட்சியின் மூலம் தான் உதயமானது. இதை வெற்றிகரமாக முறியடித்த ஆங்கிலேய அரசு இந்தியர்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க உறைவிடம் இன்றி, சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், மொழியின் பெயரால் ஆங்கிலேயரின் பிரித்தாலும் சூழ்ச்சியினால் மக்களிடையே மோதல்களை உருவாக்கினார்கள். பிரிட்டிஷாரின் நேரடி கட்டுப்பாட்டில் இந்தியா வந்தது. இந்தியர்களை மிகுந்த கொடுமைக்கு ஆளாக்கினார்கள். இதுவே ஒரு காலகட்டத்தில் சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக ஒலிக்கத் தொடங்கியது.

இதற்கு ஏராளமான தலைவர்களின் குரல்கள் மேலோங்கி இருந்தது மிக முக்கிய காரணமாகும். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங், மங்கள் பாண்டே, மகாத்மா காந்தி, ராணி லட்சுமிபாய், சரோஜினி நாயுடு, சந்திரசேகர் ஆசாத், பாபாசாகேப் அம்பேத்கர் உள்ளிட்ட எண்ணற்ற தலைவர்கள் சுதந்திரத்திற்காக பாடுபட்டனர். இவர்கள் ஆங்கிலேயர் சாம்ராஜ்யத்திற்கு எதிராக மிகவும் தைரியமாக புரட்சித் தீயை பற்ற வைத்தனர். இதில் அகிம்சை வழியிலான மகாத்மா காந்தியின் போராட்டம் முக்கியத்துவம் பெற்றது. இது ஆங்கிலேயர்களின் அஸ்திவாரத்தை ஆட்டம் காண வைத்தது. இத்தகைய போராட்டங்கள், புரட்சிகள், உயிர்த் தியாகங்கள் விளைவாக 1947 ஆகஸ்ட் 15 இந்தியா சுதந்திரம் பெற்றது.

இரண்டு உலகப் போர்கள் முடிந்துவிட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அன்றைய சோவியத் யூனியன் வலுவான நாடாக தடம் பதித்ததுடன் பல நாடுகள் சோசலிச அமைப்பை நோக்கி அடியெடுத்து வைத்தன. மேலும் பல நாடுகள் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று மாற்றத்தை ஏற்படுத்தின. ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலம் மாறி நம்மை நாமே ஆளப் போகிறோம் என்ற நம்பிக்கையில் மக்கள் இருந்தனர். பசி, பிணி, கல்வியின்மை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்று சமூக பொருளாதார ரீதியில் முன்னேறுவோம் என்ற கனவு இருந்தது. இந்தியா விடுதலை பெற்றதும் வளர்ச்சி எப்படி இருந்தது?

சமூக பொருளாதார கூட்டமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. 1947 முதல் 1966 வரை நெருக்கடி காலகட்டமாக இருந்தது. 19661980 வரை ஓரளவு தொழில் மாற்ற காலமாக இருந்தது. 19801990 அரசு செலவு மூலம் ஏற்பட்ட வளர்ச்சி காலமாகவும் இருந்தது. அரசு முதலீடு மற்றும் இறக்குமதிக்கு மாற்று நிலச்சீர்திருத்தங்கள், உள்நாட்டு சந்தை விரிவாக்கம் போன்றவை இருந்தபோதிலும் நிலவுடமை அப்படியே இருந்தது. அன்றைய சோவியத் யூனியன் பிரமிக்கத்தக்க வளர்ச்சி பல நாடுகளை திட்டமிட்ட பொருளாதாரத்தை நோக்கி செல்வதற்கு ஏதுவாக இருந்தது. அந்த அடிப்படையில் இந்தியாவும் திட்டமிட்ட பொருளாதாரம் என்பதை கடைபிடித்து ஐந்தாண்டு திட்டங்கள் போடப்பட்டு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு சில துறைகளில் வெற்றியும் பெற முடிந்தது. சோவியத் யூனியன் உதவியுடன் இரும்பு எஃகு ஆலைகள் நிறுவ முடிந்தது, வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்றது.

சுதந்திரம் அடைந்த பின்னர் நம் நாட்டில் புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்டதால், உலகமயம், தனியார்மயம், தாராளமயத்தால் இந்தியாவின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதோடன்றி விவசாயிகள், உழைப்பாளிகளின் நிலை கேள்விக்குள்ளானது.

### கொரோனா காலத்தில் 74வது சுதந்திர தினத்தில் இன்று கால்தடம் பதித்த இந்தியா

இந்திய நாடு விடுதலை பெற்று 63 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டது. இத்தருணத்தில் நாம் கண்ட கனவுகள் நனவாகி உள்ளனவா? என பரிசோதனை செய்வது மிக அவசியம். 1990 வரை வளர்ச்சி நிலையை எட்டிய இந்தியா 1991 முதல் தற்போது வரையிலான நவீன தாராளமயமாக்கல் கொள்கை அமுலாக்கம் மற்றும் அதன் விளைவுகள் கடந்த எழுபது ஆண்டுகளில் கல்வி, சுகாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பதை மறுக்க இயலாது. ஆனால் இந்த வளர்ச்சி என்பது அனைவருக்கும் பயனளிக்கக்கூடியதாக அமையவில்லை என்பதுதான் உண்மை. கடந்த கால் நூற்றாண்டில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மிகவும் அதிகரித்துள்ளன. உலகமயம் என்ற பெயரில் ஏற்றுமதிசார் உற்பத்தி, இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் நீக்கம், மானியங்களை வெட்டுதல், பொதுத்துறைகளை தனியாருக்கு தாரை வார்த்தல் போன்ற நடவடிக்கைகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களை கடுமையாக பாதித்துள்ளது. தனியார் முதலாளிகளின் ஆதிக்கம் அனைத்து துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

சர்வதேச அளவிலும் ஏற்பட்ட பொருளாதார மந்தம் யாரையும் விட்டுவைக்கவில்லை. கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல் என்று இன்றைய இந்திய நிலை உள்ளது. 60 ஆண்டு காங்கிரஸ் ஆட்சி ஊழலில் திளைத்து மக்களுக்கு எதையுமே செய்யவில்லை என்றும், 60 ஆண்டுகளில் செய்யாததை ஆறே ஆண்டுகளில் செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்த அரசு இன்று வரை இந்திய பொருளாதாரம் முன்னேற எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, பண மதிப்பீடு இழத்தல், பொதுத்துறை சொத்துக்களை தனியாருக்கு தாரை வார்த்தல், கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சாதகமாக அனைத்து கொள்கைகளையும் சட்டதிட்டங்களையும் மாற்றல் மட்டுமே உள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்துள்ளது. மாணவர்கள், இளைஞர்களின் எதிர்காலம் சூறையாடப்பட்டு கேள்விக்குறியாகி உள்ளது. அனைத்து துறைகளும் தனியார்மயம். புகழ்பெற்ற இந்திய ரயில்வே துறை தனியாருக்கு தாரை வார்க்கப்படுகிறது. கொரோனாவை காரணம் காட்டி அனைத்து துறையும் தனியாருக்கு தாரைவார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 144 தடை உத்தரவால் தனிநபர் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. பெண்களின் நிலை மோசமாக உள்ளது. பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்து பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் பாதுகாப்பற்ற நிலையே இன்றைய இந்திய சுதந்திர இந்தியாவின் நிலை.

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே**

நாடு ஒன்று தான். ஆனால் நம் வாழ்க்கை தான் பல மாறுதலுக்கு உட்பட்டு விட்டது. "முப்பது கோடி முகமுடையாள்" என்று பாடினான் பாரதி அன்று. ஆனால் இன்று 130 கோடி ஆகிவிட்டது. மக்கள் தொகையில் மட்டுமா இந்த மாற்றம்? அடிப்படைகள் அனைத்திலும் பல மாற்றங்களை சந்தித்து வருகிறார்கள். நம்மால் முடியும் என பல்வேறு துறைகளில் சாதிக்கும் நம்மால் ஒன்றுபட்ட தேசத்திற்கு துணை நிற்கவும் முடியும் என்பதை மனதில் நிறுத்தி வெற்றி காண்பது அவசியம். இதற்கென மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டத்தை நடத்தி நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கடமை நம் அனைவரின் முன் உள்ளது.

- *சி.பரமேஸ்வரி*



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் பொதுச்செயலாளரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தலைவருமான மறைந்த தோழர் இரா. முத்து சுந்தரம் (ஆர்.எம்.எஸ்) அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக நாகப்பட்டினத்தில் 08.08.2020ஆம் நாளன்று நடைபெற்ற மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்களால் வாசிக்கப்பட்ட நினைவேந்தல் கவிதை

# கண்டு கொண்டேன்!
# கண்டு கொண்டேன்!

நான்
கல்லறைக்குப் போனேன்
உனைக்காண. (2)

பளிங்கினால் ஆன
கற்களைக் கண்டேன்.
பலப்பெரிய கணவான்களின்
பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்த
சிலுவைகளைப் பார்த்தேன்.

ஆனால் உன் பெயரில்
எந்த சிலுவையும் இல்லை. (2)

கல்லறைத் தோட்டக்காரன் வந்தான்
''நீ எங்கே?'' என்று கேட்டேன்
''நீ அங்கில்லை'' என்றான்.
ஏனென்று கேட்டேன்;
''நீ கிறிஸ்துவனில்லை'' என்றான்!(2)

***

நான் மயானபூமிக்கு போனேன்.
காவலாளியிடம் உன்பெயர் சொல்லி
உன்னை புதைத்த இடம் கேட்டேன். (2)

காவலாளி சிரித்தான்.
''மனிதனுக்கு மண் சொந்தமில்லை
மண்ணுக்குத்தான் மனிதன்
சொந்தம்.
இலட்சக் கணக்கானவர்கள்
புதைக்கப்பட்ட இடத்தில்
எப்படி தேடுவாய் அவரை?''
என்றான்.

''நீ இலட்சியத்திற்காக
புதைக்கப்பட்டவன்
உனக்கென தனிஇடம்
இருக்கும்'' என்றேன்.

''அடையாளத்துடன்
இங்கே யாரும்
புதைக்கப்படுவதில்லை''
என்றான் அவன்.

''ஒருவேளை நீ
எரிக்கப்பட்டிருப்பாயோ?''
என வினவினேன்.
காவலாளி இன்னும்
பெரிதாக சிரித்தான்.
''சவக்குழிகள் பல உண்டு;
ஆனால் எரிமேடை
ஒன்றுதான்'' என்றான். (2)

இருப்பினும்
என்னுடைய
ஆற்றாமை கண்டு
லெட்ஜரை புரட்டினான்.

லெட்ஜரில்
நிறைய பெயர்கள்
நிரம்பி இருந்தன
உன் பெயர் மட்டும்
விடுபட்டிருந்தது. (2)

''எப்படி விடுபட்டது
உன் பெயர் மட்டும்?''
என்று கேட்டேன்.
காவலாளி சொன்னான்.
''நீ இந்துவாக
இருந்திருக்க மாட்டாய்
அதனால்தான்
இந்த லெட்ஜரில்
இல்லை'' என்றான்.

***

நான் மசூதி தோட்டம்
போனேன்.
உன் பெயரைச்
சொன்னதுமே
''நீ அங்கே இல்லை'' என்று
சொல்லிவிட்டார்கள். (2)

எனக்கும் அது தெரியும்தான்.
இருந்தாலும் ஒரு சந்தேகம்
நீ ஒருவேளை
மனம் மாறியிருப்பாயோ?
மதம் மாறியிருப்பாயோ? என்று. (2)

***

நான் உன் வீட்டுக்குப் போனேன்.
வீட்டில் சொன்னார்கள்,
''மருத்துவமனைக்கு போனவன்
வரவேயில்லை'' என்று.

***

நான் மருத்துவமனைக்குப்
போனேன்.
நான் மருத்துவமனைக்குப்
போனேன்.
மருத்துவரே மரண பயத்தில்
இருந்தார்.

அவரிடம் உன்னைக் கேட்டேன்.
அவர் ''என்னால் உன்னை
அடையாளம் காட்ட முடியுமா?''
என்று திருப்பிக் கேட்டார். (2)

மகிழ்ச்சியுடன் ''முடியும்'' என்றேன்.

நூற்றுக்கணக்கான பிணங்கள்
வைக்கப்பட்டிருக்கும்
பிணவறையைக்
காட்டி, ''அங்கே போய் பாருங்கள்''
என்றார்.

டாக்டரிடம் ''நீ காணாமல் போய்
மூன்று வருடங்கள் ஆகிறது''
என்றேன்.
டாக்டர் என்னை
ஒருமாதிரியாகப் பார்த்தார். (2)

அவர் என்னை அடுத்த கேள்வி
கேட்பதற்கு முன் நான்
முந்திக்கொண்டேன்.
''நீ உடல்தானம்
செய்யப்பட்டிருக்கிறாய்'' என்றேன்.

அரசு
ஏதோ எழுதிக்கொண்டே
உன் பெயர் கேட்டார்.
பெயர் சொன்னதும் ''தெரியும்''
என்றார்.
மருத்துவர் அவசரத்தில் இருந்தார்.
அறிக்கை
''நீ பாடம் செய்யப்பட்டிருக்கிறாயா?''
என்று கேட்டேன்.

''நீ பாடமாக படிக்கப்பட்டிருக்கிறாய்
ஆனால் பாடம்
செய்யப்பட்டிருக்கிறாயா''
என்று தெரியவில்லை என்றார். (2)

''அப்படியானால்
எப்படி உன்னைக் காண்பது?''
என்று கேட்டேன்.

''கல்லூரி மூடப்பட்டிருக்கிறது
கரோனா போனபின் வா.
ஆராய்ச்சிக்குபின் நீ என்ன ஆனாய்''
என்று அறிந்து சொல்வதாக
அரசு மருத்துவர் விளம்பினார்.

* * *

எங்கும் உன்னைக் காண முடியாத
சோகத்தில் சங்கத்திற்கு வந்தேன்.
(2)

ஜூம் ஆப்பில் ஏதோ
நிகழ்ச்சியை தோழர்கள்
லேப்டாப்பில் சின்சியராக
பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கிட்டே போய் பார்த்தேன்.
அட என்ன ஆச்சர்யம்
நிகழ்ச்சியில் இருந்தவர்கள்
முகச்சாயல் உன்னைப்போலவே
இருந்தது. (2)

மேடையில் பேசியவரின்
முகமும் உன் முகம்தான். (2)

''என்ன நிகழ்ச்சி இது?'' என்று
கேட்டவாறு பக்கத்தில் இருந்த
தோழரைப் பார்த்தேன். (2)

அட அவர் முகமும் உன்முகமாய்த்
தெரிந்தது.

சந்தேகப் பட்டு எதிரிலிருந்த
பீரோ கண்ணாடியில்
என் முகம் பார்த்தேன். (2)

அட என் முகமும்
உன் முகமாய் மாறியிருந்தது. (2)

(சில நொடிகள் மௌனம்)

இங்கே இருக்கும் உன்னை
நான் எங்கெல்லாம் தேடினேன். (2)


என்னுள் இருக்கும் உன்னை
கண்டுகொள்ளும் பொறுமையற்று
நான் எங்கெங்கு ஓடினேன். (2)

இப்போது நான் கண்டுகொண்டேன்;
நீ இருக்கும் இடம் தோழர்கள்
மனமென்று!
இப்போது நான் கண்டுகொண்டேன்;
உன்னுடைய மதம்
தோழமையென்று! (2)

நீ பிறந்ததால் இறந்தவனில்லை;
இறந்ததால் பிறந்தவன் எங்களுள்!
நீ எங்களின் இருப்பு - உனக்கு
எப்போதும் இல்லை இறப்பு! (2)

**(கவியாக்கம் : ஜிஜி)**






Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com